MUSLIM CONGRESS
COLOMBO

திசை
THISAI

உள்ளே...

- இந்தியாவின் பாதுகாப்புத் தத்துவம்
- சார்க் அமைப்பின் பின்னணி
- விம்பிள்டன் சம்பியன்கள்
- மேற்கு நாடுகளில் தமிழ்ச் சஞ்சிகைகள்
- சிறுகதைப் போட்டி முடிவுகள்
- பலஸ்தீனக் கவிதை
- சிந்தனை மேடை, தோழி பகுதிகள்

திசை 1 | 14-7-1989 வெள்ளிக்கிழமை | விலை : ரூபா 3-50 | முகம் 27

## இந்திய அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில்

# விரைவில் யுத்த நிறுத்தம்?

**இதுகாலவரை இந்திய அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நிலவிவந்த கெடுபிடிப் போக்குத் தளர்ந்து இரு பகுதியினரும் பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினைகளை அணுக முன் வந்திருப்பதாக அடிபடும் செய்திகள் இலங்கை அரசியலில் திடீர் திருப்பத்தை ஏற்படுத்தலாம் என்றும் இத்திருப்பமானது இலங்கை இனப்பிரச்சினைக்கு ஒரு சுமுகமான தீர்வை விரைவில் கொண்டு வரலாம் என்றும் உயர்மட்ட அரசியல் வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றன.**

இந்தியாவோடு நிபந்தனையற்ற பேச்சுக்கு விடுதலைப் புலிகள் சம்மதித்திருப்பதாகவும் இந்திய அரசு அதை ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் கூறப்படும் செய்திகளில் இருந்து விரைவில் இரு பகுதியினருக்குமிடையே யுத்த நிறுத்தம் ஏற்படலாம் என்றும் தெரிய வருகிறது.

இதற்கிடையில் நேற்று முன் தினம் ரஜீவ் காந்தியின் விசேடத் தூதுவர் தேஷ்முக்கினல் ஜனதிபதியிடம் கையளிக்கப்பட்ட கடிதத்திலும் மேற்படி யுத்தநிறுத்தம் பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கலாம் என்றும் நம்பகமான வட்டாரங்கள் அறிவிக்கின்றன.

இதேவேளை இலங்கை அரசு புலிகளோடு மட்டும் மேற்கொண்ட பேச்சுவார்த்தையால் தற்போதுள்ள வடகிழக்கு மாகாண அரசுக்கு ஆபத்து ஏற்படலாம் என்ற ரீதியில் ஈ. பி. ஆர். எல். எவ். கடைப்பிடித்த தீவிரப்போக்கு இதனல் தளர்த்தப்படலாம் என்பதோடு, அவர்கள் விரும்பியதற்கேற்பவே தற்போது இந்திய அரசோடு புலிகள் பேச்சு வார்த்தைக்கு உடன்பட்டிருப்பது அவர்களின் ஆதரவையும் இதற்குப் பெற்றுத் தரலாம் என்றும் நம்பப்படுகிறது.

## அமைதிப்படை விலகல்
### ராஜீவ் புதிய கருத்து

இலங்கையில் இருந்து இந்திய அமைதிப்படை விலகுவது சம்பந்தமாக பிரதமர் பிரேமதாஸவிடம் கடிதம் ஒன்றை தனது முதலாவது செயலாளர் மூலம் கையளித்துள்ள இவ்வேளையில் அதுபற்றி இந்தியப் பிரதமர் கருத்துத் தெரிவித்துள்ளார். அமைதிப்படை விலகல், இலங்கை—இந்திய ஒப்பந்தம் சரிவர நிறைவேற்றப்படுவதிலேயே தங்கியுள்ளது என மீண்டும் வலியுறுத்திய ராஜீவ், இது சம்பந்தமாக இலங்கை இந்தியா இரண்டும் கலந்து வெளியேற்றம் பற்றி கால அட்டவணை குறித்து முடிவுக்கு வரவேண்டும் என்றும் தவறின் இந்தியா தன்னிச்சையாகவே கால அட்டவணை தயாரித்து செயல்படவேண்டிவரும் என்றும் எச்சரித்துள்ளார்.

## வட-கிழக்கு இளைஞருக்கு நலன்புரி நிலையம்

அச்சம் காரணமாக வடக்குக் கிழக்குப் பகுதிகளிலிருந்து வெளியேறிக் கொழும்புக்கு வரும் தமிழ் இளைஞர்களுக்காக நலன்புரி நிலையமொன்று அரசாங்கத்தால் திறக்கப்பட்டுள்ளது.

பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியில் அமைந்துள்ள இந்த நிலையத்தில் தங்கியிருக்க விரும்புவோர், தமது அடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடிய ஏதாவது ஆவணத்துடன் வருமாறு புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சு அறிவித்துள்ளது.

## ஈ.பி.ஆர்.எல்.எவ். அறிக்கை

''வடக்கு — கிழக்கிலுள்ள இளைஞர்களுக்கு புகலிடம் அளிப்பதென்னும் பெயரால் பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியில் ஸ்ரீலங்கா இராணுவத்திடம் பயிற்சி பெறுவதற்கு தமிழ் இளைஞர்களை அணிதிரட்டும் நடவடிக்கையில் அரசும் ஜனதிபதி பிரேமதாஸாவுடன் பேச்சுவார்த்தை நடத்திவரும் தமிழர் குழுவும் இணைந்து ஈடுபட்டு வருகின்றது'' என்று, ஈ. பி. ஆர். எல். எவ். அறிக்கையொன்றில் கூறியுள்ளது.

## சந்திரனில் காலடி-வயது 20

"எனக்கோ இது ஓர் அடி. ஆனல் மனித இனத்துக்கோ இது ஒரு பெரும் பாய்ச்சல்" இவ்வாறு சந்திரனில் முதன் முதல் காலடி வைத்தபோது அமெரிக்க விண்வெளி வீரரான நீல் ஆம்ஸ்ட்ரோங் கூறினர் அல்லவா? சந்திரனில் காலடி வைத்த அந்த மாபெரும் பாய்ச்சலாகிய நிகழ்வு இம்மாதம் 20ந் திகதியுடன் 20 வருடங்களைப் பூர்த்திசெய்கிறது. இது சம்பந்தமான கருத்தரங்கு வைபவம் - நினைவு

(12ஆம் பக்கம் பார்க்க)

*முஸ்லிம் வாசகர்களுக்கு*
*எமது ஹஜ்ஜுப் பெருநாள்*
*வாழ்த்துக்கள்!*

## இ.போ.ச. ஊழியர் - அரசு உடன்படிக்கை

இன்று அதிகாலை ஜனதிபதியின் பணிப்பில் உருவான அரசுக் குழுவினருக்கும் இலங்கை ஜாதிக கங்கருசங்கமய என்ற தொழிற்சங்க குழுவினருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள உடன்படிக்கையை அடுத்து, இ. போ. ச. ஊழியர் வேலைக்குத் திரும்புவர் என எதிர்பார்க்கப்படுகிறது. இது சம்பந்தமாக அரசுக்குழுவில் ஒருவரும் போக்குவரத்து அமைச்சருமான சிறீ விஜேபால மென்டிஸ் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார். அதன்படி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட ஊழியரின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டன.

அப்பரிசிலனையின் பின்னர் இ. போ. ச. ஊழியரின் சம்பள உயர்வுக் கோரிக்கை பின்வருமாறு தீர்க்கப்பட்டதாக அமைச்சர் தெரிவித்தார். 1985 ஜனவரி தொடக்கம் போக்குவரத்துசபை ஊழியர் ஒவ்வொருவர்க்கும் 45 ரூபா சம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## உலக சாதனை

தமிழ்நாட்டிலுள்ள கடலூரைச் சேர்ந்த ஜெயராமன் என்பவர் 360 மணித்தியாலங்கள் தொடர்ந்து பேசி உலக சாதனையை நிலைநாட்டியுள்ளார். இதன்மூலம் 'கின்னஸ்' புத்தகத்தில் இடம்பெறப் போகும் இவருக்கு வயது 57.

'பேசுவதில்' தமிழன் சளைத்தவன் இல்லை என்ற பாரம்பரியம் உலகிற்கும் தெரியப் போவதாக, இதுபற்றிக் குறிப்பிட்ட ஒருவர் கேலியாகச் சொன்னர்.




'சற்றடே றிவியூ'வின் சகோதர வாரப் பத்திரிகை

**திசை** THISAI

ஆசிரியர்:
மு. பொன்னம்பலம்

சந்தா விபரங்கள்:
(உள்நாட்டுத் தபாற் கட்டணத்தையும், வெளிநாட்டுத் தபாற் கட்டணத்தையும் உள்ளடக்கியது.)

இலங்கை
ஒரு வருடம்–ரூபா: 200/–
அரைவருடம்–ரூபா: 100/

இந்தியா
ஒரு வருடம்–ரூபா: 300/–
(இந்திய ரூபா)

சிங்கப்பூர் / மலேசியா
ஒரு வருடம் –
யு.எஸ்.டொலர் 40

ஏனைய நாடுகள்
ஒரு வருடம் –
யு.எஸ்.டொலர் 60

காசோலைகள் அனைத்தும் நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் லிமிட்டெட் (New Era Publications Ltd.) என்றே எழுதப்பட வேண்டும்.

பத்திரிகை விநியோகம், சந்தாப்பணம், விளம்பரம் போன்ற நிர்வாகத் தொடர்பு முகவரி:

118, 4ஆம் குறுக்குத்தெரு,
த. பெ. 122,
யாழ்ப்பாணம்.


# பிரஜா உரிமைச் சட்டம்- ஏட்டுச் சுரைக்காயா?

மலையகத் தமிழர் வரலாற்றில் பிரஜா உரிமை பெறுவது என்பது கல்லில் நார் உரிப்பது என்ற விடயமாகவே இருந்து வந்துள்ளது. அண்மையில் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட பிரஜாவுரிமைச் சட்டம் அவர்கள் அனைவரையும் இலங்கைப் பிரஜைகளாக அங்கீகரித்து அவர்கள் தங்களை வாக்காளராகப் பதிந்துகொள்ளலாம் என்று அறிவித்துள்ளது.

பிரஜாவுரிமைச் சட்டம் அமுலுக்கு வந்துங்கூட அதன் பலாபலன்களை இன்னும் இவர்கள் அனுபவிக்கத்தொடங்கவில்லை. இன்னும் இடைஞ்சல்களைஎதிர் கொள்கின்றனர். தேசிய அடையாள அட்டை பெறுவது, கடவுச்சீட்டுப் பெறுவது, வங்கிக் கடன்கள் பெறுவது, அரசாங்க அலுவலகங்களில் ஈடுபடுவது போன்றவைகளில் இன்னும் பாரபட்சம் காட்டப்படுகிறது.

அண்மையில், 1966 இல் இலங்கையில் பிறந்த ஒருபெண் பிள்ளை அடையாள அட்டை பெற அவரின் பாட்டனரின் பிறப்புச் சான்றிதழ் கோரப்பட்டது. அந்தப் பிள்ளையின் தகப்பன் 1942இல் இலங்கையில் பிறந்திருந்தும் அவருடைய பிறப்புச் சான்றிதழ் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. மேலும் பதுளையில் பிரஜாவுரிமைச் சான்றிதழ் இல்லையென்ற காரணத்தினால் ஒரு மலையகத் தொழிலாளிக்கு வங்கிக் கடன் வழங்கப்படவில்லை. இவர்கள் அனைவரையும் இலங்கைப் பிரஜைகளாக அரசாங்கம் அங்கீகரித்த பின்பும் இத்தகைய சம்பவங்கள் ஏன் நடக்கின்றன எனும் விடயத்தில், இது சம்பந்தப்பட்ட அனைவரும் கூட்டாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு இவர்களின் பிரஜாவுரிமையின் பலாபலன்களை உறுதிப்படுத்தினாலன்றி, மலையகத்தின் பிரஜாவுரிமை ஏட்டுச் சுரைக்காயாகவே இருக்கும்.

— வெ. மனோ
யாழ். பல்கலைக்கழகம்.

## ஒரு விளக்கம்

யாழ். உதைபந்தாட்டலீக் நடாத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் 12. 5. 89 இல் நடை பெற்ற சென். அன்ரனிஸ் A எதிர் பாடும்மீன் A போட்டியின்போது, சென் அன்ரனிஸ் கழகம் மிகவும் கடுமையாக விளையாடியது என்பதும், சென். அன்ரனிஸ் கழக வலது பின்னணி வீரரின் தப்பான ஆட்டத்திற்கு மத்தியஸ்தர் விசில் ஊதி ஆட்டத்தை நிறுத்தியபோது பாடும்மீன் கழக வலது கோடி முன்னணி வீரர் மேற்படி சென் அன்ரனிஸ் கழக வீரரை நோக்கி ஓடியபோதுதான் அக்கழக ஆதரவாளர்களும் உள்ளே நுழைந்து ஆட்டம் குழம்பியது என்பதும் யா. உ. லீக் நிர்வாக சபைக்கூட்டத்தில் இது விடயமாக ஆராயப்பட்டபோது



ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மையாகும். ஆட்டம் முடிவடைவதற்கு இன்னும் 12 நிமிடங்கள் உள்ளன, (8 நிமிடங்கள் அல்ல) என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உதைபந்தாட்டப் போட்டிகளைக் கட்டுப்படுத்துவதற்கென்று மத்தியஸ்தர்கள் கடமையாற்றுகிறார்கள். தப்பான ஆட்டத்திற்கு மத்தியஸ்தர் விசில் ஊதியபின்னர் பாடும்மீன் கழக வீரர் சென் அன்ரனிஸ் கழக வீரரை நோக்கி ஓடியது சரியானது எனத் திரு. ச. சிறில் அவர்கள் கூறுகிறாரா?

திரு ச. சிறில் அவர்கள் மேற்படி போட்டியைப் பார்வையிடாமல் எமது கழகத்தின் மீது வீண்பழிசுமத்தும் நோக்கத்துடனேயே பத்திரிகையில் எழுதியுள்ளார் என்பது தெளிவாகிறது.

காற்பந்தாட்டம் காலித்தனமாக மாறக் கூடாது என்பதே எமது கழகத்தின் நிலைப்பாடு. இதன் காரணத்தினாலேயே எமது கழகம் யா. உ. லீக் போட்டிகளில் மேலும் கலந்து கொள்ளாமல் கௌரவமாக விலகிக் கொண்டது. எமது கழகம் ஏதோ உண்மையை மறைக்க முடியாமல் போட்டிகளில் இருந்து விலகிக் கொண்டதாகத் திரு. ச. சிறில் அவர்கள் எழுதியிருந்தார். அப்படியல்ல. 18/6/89 இல் நடைபெற்ற குருநகர் றெக்கிளமேசன் சனசமூக நிலைய 25 ஆவது ஆண்டு விழா கரபந்தாட்ட இறுதிப்போட்டியில் சென். அன்ரனிஸ் A, பாடும்மீன் B கழகங்கள் போட்டியிட இருந்ததையும் எமது கழகம் போட்டியில் கலந்து கொள்ளாமல் பாடும்மீன் B கழகத்திற்கு வெற்றியளித்ததையும் திரு. சிறில் அவர்கள் அறிவாரா? வெற்றிக்கிண்ணத்தைப் பெறுவது மட்டும் எமது கழகத்தின் நோக்கம் அல்ல. கைப்பந்தாட்டம் கைகலப்பில் முடியக்கூடாது என்பதில் நாம் அக்கறை கொண்டிருக்கிறோம்.

விளையாட்டின் மூலம் சிநேகபூர்வமனப்பான்மை, நற்பண்புகள், வெற்றி தோல்வியை சமமாக ஏற்றுக் கொள்ளும் பண்பு வளரவேண்டும் என்பதே எமது அவா.

பார்வையாளர்களுக்கிடையே ஏற்பட்ட மோதலினால் பாடும்மீன் கழகத்தைப் போன்று எமது கழகமும் கூடத் தண்டிக்கப்பட்டிருந்தும் யா. உ. லீக்கின் தீர்மானத்தை எமது கழகம் ஏற்றுக்கொண்டது. எமது கழக ஆதரவாளர்களுக்கும் இது ஒரு படிப்பினையாக அமைந்து எதிர்காலத்தில் பிரச்சினைகள் வரும்போது அவற்றைத் தவிர்க்க முற்படுவார்கள் என்று இதன் மூலம் நாம் எதிர் பார்க்கிறோம். இதுவே எமது கழகத்தின் நிலைப்பாடு.

— செயலாளர்
புனித அந்தோனியார் வி.க.
பாஷையூர்.

## சிறுவனின் மனித நேசம்

"இந்த மண்ணும் எமது நாட்களும்'' துயர் படிந்த நிலையே இன்னமும் தொடர்கிறது. எம்மைச் சுற்றிலும் பாதிப்புக்களினதும் இழப்புக்களினதும் கனம் அழுத்த அவலப்பட்டபடி பலர் வாழ்கிறார்கள்; இவர்கள் உதவிக்காக ஏங்குகிறார்கள்.

இந்நிலையில் ஆடம்பரக் கொண்டாட்டங்களிலும், தேவையற்ற விழாக்களிலும் யாரும் பணத்தைச் செலவழிப்பது சரியில்லை. இதில் செலவாகக்கூடிய பணத்தைத் துயர் துடைப்புப்பணிகளில் ஈடுபட்டு உழைத்துவரும் அமைப்புக்களிற்குக் கொடுத்தால், அதனால் பலர் பயன்பெறுவார்கள்.

சமீபத்தில் யாழ்ப்பாணத் தினசரியொன்றில் வந்த இரண்டு செய்திகள் என் நெஞ்சைத் தொட்டன. பருத்தித்துறையைச் சேர்ந்த சுவாமி சித்ரூபானந்தா, ஹாட்லி கல்லூரியின் நூற்றிஐம்பதாவது ஆண்டை ஒட்டி கொழும்பு ஐந்து நட்சத்திர ஹோட்டலில் நடந்த விருந்துபசாரத்தைக் குறிப்பிட்டு, அப்பணத்தைக் கஷ்டப்படுபவர்களுக்கு உதவியிருக்கலாம் எனப், பத்திரிகைக்குக் கடிதம் எழுதியிருந்தார். மற்றது, 11வயதுச்சிறுவன் ஒருவன் தனது பிறந்த தினத்திற்காகப் பெற்றோர்கொடுத்த 500 ரூபாவை, யாழ்ப்பாணத்திலுள்ள ஜெய்ப்பூர் செயற்கைக் கால் நிறுவனத்திற்கு வழங்கிய செய்தி. இச்சிறுவன் சென்ற வருடமும் இவ்வாறே செய்தானாம்.

எழுத்தாளர்களின் மணிவிழாக்கள், பிறந்த நாள் கொண்டாட்டங்களைப் பற்றிய செய்திகளும் பத்திரிகைகளில் வருகின்றன. இன்னும் சிலருக்குப் பிறந்தநாள் விழா பெரிதாகக் கொண்டாடப்படப்போகின்றதாம். ரோம் எரிகையில் நீரோ மன்னன் பிடில் வாசித்தானாம்! சமூகத்துக்கு வழிகாட்டவேண்டியவர்கள் எழுத்தாளர்கள். அவர்களே இப்படிச் செய்வதைக்கண்டு கோபப்படுவதா? பரிகசிப்பதா என்று எனக்குத் தெரியவில்லை. பதினொரு வயதுச் சிறுவனுக்குள்ள மனித நேசமும் பொறுப்பும் கூட இல்லாத 'வாய்ச்சொல் வீரர்கள்' தானா எங்களுடைய எழுத்தாளர்கள்?

— தாஸ்
தாவடி.

## ஈத்முபாரக் வாழ்த்து!

உலகிலுள்ள முஸ்லிம்கள் ஒன்று கூடி புனித ஹஜ்ஜை நிறைவேற்றும் இத் திருநாட்களில், நாமும் தியாகத்தைப் போற்றும் இத்தினத்தில் எங்களது ஈத்முபாரக் வாழ்த்துகளை திசைக்கும், வாசகர்களுக்கும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

ஈத்முபாரக்! ஈத்முபாரக்!

செல்வன் முகம்மத் அனீஸ்
கமீத்,
செல்வி பாத்திமா, றஸானு
கமீத்
யாழ்ப்பாணம்.

## மீண்டும் மோதல்

அண்மைக்காலமாக புது வேகத்துடன் நடந்து வரும் இஸ்ரேலியர்களுக்கு எதிரான பலஸ்தீனிய மக்களின் போராட்டம் தற்போது உச்ச நிலையை அடைந்துள்ளது. அண்மையில் 14 இஸ்ரேலியர்கள் பலஸ்தீனிய கெரில்லாக்களின் தாக்குதல்களுக்குப் பலியானார்கள். கடந்த 10 வருடகாலமாக நடைபெற்ற வன்முறையில் இல்லாத துணிச்சலையும் பயங்கரத்தையும் இக்கொலைகள் ஏற்படுத்தியுள்ளதால் இஸ்ரேலியர்கள் இதற்குப் பதிலடி கொடுக்கத் தொடங்கியுள்ளனர். இதன்காரணமாக அராபியர் ஒருவர் கொல்லப்பட்டும் 19 பேர் வரை காயப்பட்டும் உள்ளனர். மேலும் இவ்வன்முறையின்போது பத்திரிகையாளர், பொலிசார் ஆகியோரும் தாக்கப்பட்டுள்ளனர்.

## நினைவுச் சொற்பொழிவு

மறைந்த பேராசிரியர் சோ. செல்வநாயகம் அவர்களின் நினைவுச் சொற்பொழிவு எதிர் வரும் 19ஆம் திகதி மாலை 3 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

சிரேஷ்ட புவியியல் விரிவுரையாளரான செ. பாலச்சந்திரன் சங்ககால நகரங்களின் அழிவும் கடல் கோள்களின் நிகழ்வும் என்ற தலைப்பில் நினைவுச் சொற் பொழிவை நிகழ்த்துவார்.

நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி தலைமை வகிப்பார்.

# சர்வாதிகாரிகளுக்குரிய காலம் அஸ்தமிக்கிறது

அண்மையில் அமெரிக்காவுக்கு விஜயம் செய்த பாகிஸ்தான் பிரதம மந்திரி திருமதி பெனுசிர் பூட்டோ, அமெரிக்க நாடாளுமன்றக் கொங்கிரஸில் பேசிய போது, "உலகெங்கும் சர்வாதிகாரிகளுக்குரிய காலம் அஸ்தமித்து வருகிறது'' என்று கூறியுள்ளார். மீண்டும் அவர் ஹவார்ட் பல்கலைக்கழகத்தில் பேசியபோது, இதை மேலும் விபரித்து ஓர் புதிய அரசியல் தத்துவத்தின் தேவையையே ஆரம்பித்து வைத்துள்ளார் என்றே கூறலாம்.

அதாவது அவரது பேச்சு உள்ளடக்கிய நோக்காவது, ஒரு நாட்டின் முறையான ஜனநாயக ஆட்சியைக்கவிழ்க்க அந்நாட்டில் கிளம்பும் இராணுவ சர்வதிகாரப் போக்குகளை உலகநாடுகள் ஆதரிக்கக் கூடாது. அவற்றுக்கெதிரான பொருளாதாரத் தடைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். சர்வாதிகாரப் போக்கை எந்த நாடும் எந்த ரீதியிலும் ஆதரிக்கக் கூடாது. இவற்றுக்குப் பதிலாக ஜனநாயக, தாராண்மைக் கொள்கைகளைப் பேணும் மூன்றும் உலக நாடுகளுக்கு ஏனைய வளர்ச்சியுற்ற நாடுகள் உதவவேண்டும்.

மேலும் ஒரு நாட்டின் சர்வாதிகாரப் போக்குக்கு எதிராகக் கிளம்பும் ஜனநாயகப் போக்குக்கும், மக்கள் ஆட்சிக்கும் சர்வதேச ரீதியில் ஆதரவு வழங்கவேண்டும். இதற்கெதிராகக் காட்டப்படும் காலங்கடந்த கொள்கைகளான (1) ஒரு நாட்டின் இறைமையைப் பேணுதல் (2) அந்நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாமை போன்றவை கைவிடப்பட்டு, எந்நாட்டிலும் தலைதூக்கும் மக்களை அழிக்கும் ஓர் அரசின் அராஜகப் போக்குகளைத் தடைசெய்ய முன்வரவேண்டும்

o

# பெக்கர், கிராவ் விம்பிள்டன் சம்பியன்கள்

டென்னிஸில், ஒலிம்பிக் சம்பியன், டேவிஸ் கோப்பை சம்பியன், விம்பிள்டன் ஆண்கள், பெண்கள் பிரிவுச் சம்பியன். மேற்கு ஜேர்மனியின் இவ்வுலகப் புகழுக்குக் காரணகர்த்தாக்கள் இருவர். 85, 86ஆம் ஆண்டுகளில் விம்பிள்டன் பட்டத்தை வென்ற 21 வயது போறிஸ் பெக்கர் அதில் ஒருவர்; 88இல் வென்ற உலகின் முதற்தரப் பெண் வீராங்கனையான 20 வயது ஸ்ரவி கிராவ், மற்றையவர். இவ் இளம் ஜோடியே போட்டிகளில் கலந்து கொண்ட 256 போட்டியாளர்களில் அனைவரும் எதிர் பார்த்தது போல் இம்முறை விருதைப் பெற்றுள்ளனர். ரசிகர்களின் ஆவலைப் பூர்த்தி செய்யும் விதத்தில், தமக்கே உரித்தான பாணியில் போட்டிகள் விறுவிறுப்பாகவும் நெஞ்சில் நிறைந்தனவாகவும் அமைந்தன.



போறிஸ் பெக்கர்

ஜோன் மக்கன்ரோவை மிகக் கடும்போட்டியில், வெகு அபாரமாக ஆடி ஜெயித்து இறுதிப் போட்டிக்குத் தெரிவானார், ஸ்ரபன் எட்பேர்க், அனைவரும் வியக்கத்தக்க வகையில் ஆடிய எட்பேர்க் 7-5, 1-6, 7-6, என்ற கணக்கில் வென்றமை சென்ற முறையைப் போல இம்முறையும் சம்பியன் பட்டத்தை வெல்லுவார் என, நம்ப வைத்தது. உலக ஆண்கள் முதற்தர ஆட்டக்காரர் இவான் லெண்டலிடம் தோல்வியின் விளிம்பிலிருந்து தப்பி, மனஓகாரணமாக பெற்றஓய்வு, திறமை, அனுபவம் என்பவற்றைப் பயன்படுத்தி போறிஸ் பெக்கர் 7-5, 6-7, 2-6, 6-4 6-3 என்ற கணக்கில் வென்று, தமது 4ஆவது இறுதிப் போட்டிக்குத் தெரிவானார். யூலை மாதம் 9ஆம் திகதி அன்று இறுதிப் போட்டியில் உலகின் புகழ்ப் அசகாய சூரர்களாகக் கணிக்கப்படும், சென்ற வருட சம்பியனான 24 வயதுடைய சுவீடன் நாட்டு எட்பேர்க்கும், 3 ஆவது வருடப் பட்டத்தைப் பெற பெக்கரும் மோதினர். சமபலம் பொருந்திய இருவரின் போட்டி கடுமையாக இருக்குமெனவே பலராலும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் 6 அடி 2அங்குலம் உயர — பருத்த தோள்களை உடைய — பெக்கர் தனது ஆரம்ப அதிவிரைவு, பலமிக்க ஆட்டத்தினால் எட்பேர்க்கை நிலை குலைய வைத்தார். எப்பொழுதெல்லாம் எட்பேர்க் தன்னை ஸ்திரப்படுத்த முயன்றாரோ அப்பொழுதெல்லாம் பெக்கர் தனது வாழ்நாளிலேயே சிறப்பான ஆட்டத்தை ஆடி 6-0, 7-6, 6-4 என்ற வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

முழு ஆண்கள் போட்டிகளையும் நோக்கின் கூடுதலான ரசிகர்களின் ஈர்ப்பைப் பெற்றவர் ஜோன் மக்கன்ரோ. முதல் போட்டியிலே நிச்சய தோல்வ் நிலையை தவிர்த்து ஆஸிவீரர் டாரன் கேகிலை 4-6, 4-6, 6-2, 6-3, 8-6 என்ற செட் கணக்கில் வீழ்த்தினர். பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய மற்றொரு போட்டியில் பலத்த வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டாலும், ஆஸிவீரர் ஜோன் விற்ஸ் ஜெரால்டை 6-3, 0-6, 6-3, 6-2 என்று வென்றார் 81, 82, 84 களில் சம்பியனான அவர் — மாடஸ் விலாண்டரை கால் இறுதிப் போட்டியொன்றில் ஜெயித்த அவர் — எட்பேர்க்கின் திறமைக்கு அரை இறுதிப் போட்டியில் சரணடைந்தார்.

□ வி. வாகீஸ்வரன் □

அடுத்து மக்கள் மனங்களில் நிறைந்தவர் அமெரிக்க ரிம் மெயோற். பிரெஞ்சு சம்பியன் மைக்கேல் சாங்கை வெளியேற்றிய அவரும் எட்பேர்க்குடன் நெருங்கிய சர்ச்சைக்குரிய கால் இறுதிப் போட்டியில் 7-6 7-6, 6-2 இல் தோற்றுப் போனார். அடுத்தவர் டொன் கோல்டி. பிரபல ஆட்டக்காரர்களான ஜிம்மி கானர்ஸ், அமோஸ் மண்ஸ்ரோவ், சிலொபோடான் சிவோசினேவிக் போன்றோரை மண் கவ்வ வைத்த அவர், மற்றொரு கடும் கால் இறுதிப் போட்டியில் லெண்டலடம் 7-6, 7-6, 6-0 இல் தோற்றுப் போனார்.

பெண்கள் பிரிவை நோக்கினால் அங்கு ஸ்ரபி கிராவ் இன் ஆட்சிதான். மிக மிக இலகுவாகவே எல்லோரையும் தோற்கடித்தார், மொனிக்கா செலஸ் (6-0, 6-1); அரங்ஸா சாஞ்சஸ் (7-5, 6-2); கிறிஸ் எவேட் (6-2, 6-1) போன்ற பிரபல்யங்களால் கூட ஈடுகொடுத்து ஆடமுடியவில்லை. தனது சுற்றுப்போட்டிகளில்கூட ஓரளவு சிறப்பாக அடித் தெரிவான 8 வருட சம்பியன் அமெரிக்க மாட்டினா நவரட்டிலோவாதான் 'ஸ்ரபி கிராவ்' இனை முறியடித்து ஒரு செட்டை வென்று, ஒரு அச்சுறுத்தலாக விளங்க முயன்றார். ஆனால் மாட்டினா எவ்வளவுக்கு எவ்வளவு சிறப்பாக ஆட முற்பட்டாரோ, அவ்வளவுக்கு அவ்வளவு ஸ்ரபி சிறப்பாக ஆடி 6-2, 6-7, 6-1 இல் வென்று தனது 2 ஆவது விம்பிள்டன் பட்டத்தைப் பெற்றார். தனது 32 ஆவது வயதிலும் அற்புதமாக ஆடும் மாட்டினா, ஹெலன் வில்ஸ் மூடி பெற்ற 8 வருட சாதனையை முறியடிக்க, மீண்டும் மீண்டும் ஆடுவேன் எனக் கூறியிருக்கிறார். ஆனால் 34 வயதான — 3 வருட சம்பியன் — அமெரிக்க கிறிஸ் எவேட் தனது இறுதி விம்பிள்டன் இதுவென அறிவித்திருக்கிறார். கடந்த 18 வருட காலமாக டென்னிஸ் வரலாற்றில் சாதனை புரிந்த அவரை, மீண்டும் விம்பிள்டனில் காணமுடியாமல் போவது துக்ககரமானது. மேலும் 3 ஆம் தர வீராங்கனை சபாட்டினி ஆரம்பக் கட்டத்திலேயே தோற்றமையும் துக்ககரமான துதான். பெண்கள் பிரிவில் உள்ள குறைபாடு யாதெனில் 'ஸ்ரபி' இன் தனி இராச்சியம் தான். மளமளவென எதிரிகளைத் தோற்கடிக்கிறார். விரைவாகவும் லாவகமாகவும் ஆடுவதில் அவருக்கு நிகருமில்லை; கடும் போட்டியுமில்லை. மாட்டினா, எவேட் ஆகியோரின் வீழ்ச்சிக்காலத்தில் அறிமுகமானமை அவரது ஒளிமயமான எதிர்காலத்திற்கு நல்ல வித்திட்டிருக்கிறது என்றே கூறவேண்டும்.

1985 ஆம் ஆண்டில் மிக இள வயதில்– 17 இலேயே– விம்பிள்டனை வென்ற பெக்கர் அப்போது தான் பெற்ற காரைக் கூட ஓட்டுவதற்கு லைசன்ஸ் கூடப் பெற முடியாத வயதிலிருந்தார். அவர் இப்போட்டி முடிவில் பத்திரிகையாளரிடையே பேசுகையில் "85 86 களில் பெற்ற வெற்றியைவிட இவ்வெற்றியே பெரிதெனக்கருதுகிறேன். ஏனெனில் அப்போது நான் என்ன செய்கிறேன், எது செய்கிறேன் என்று அறியாப்பருவத்தில் இளமை வேகத்திலேயே வென்றேன். இப்போது அதிகாரத்துடன் என்னால் வெல்ல முடிந்தது" எனக் கூறினர். பெக்கரிடம் இம்முறை காணப்பட்ட சிறப்பம்சங்கள் பலம், திறமை அனுபவம், பொறுமை, உடலை லாவகமாக வளைக்கும் தன்மை (acrobatic), மனதில் உறுதி மற்றும்சிறு அதிர்ஷ்டம். ஆனால் அதிர்ஷ்டக் காற்றுவீசாதமாட்டினா, மக்கன்ரோ, லெண்டில் போன்ற மற்றைய வீரர்கள் மீண்டுமொரு முறை முயற்சித்து விம்பிள்டனைப் பெறுவோம் என்ற உறுதியோடும்; பெக்கர், கிராவ், ஆகியோர் வெற்றிப் பெருமிதத்தோடும் ; ரசிகர்கள் இருவரா இனிய நினைவுகளோடும் அடுத்த விம்பிள்டனை எதிர்நோக்கி இருக்கின்றனர். □



ஸ்ரபி கிராவ்

# இந்தியாவின் பாதுகாப்புத் தத்துவம்

இந்தியப்படை இலங்கையில் இருப்பது பற்றிய வாதப் பிரதிவாதங்கள் இலங்கையிலும் சரி இந்தியாவிலும் சரி இன்னும் ஓய்ந்தபாடில்லை. இவைபற்றிய தகவல்களை ஐலண்ட் பத்திரிகையில் எழுதியுள்ள காமினி வீரக்கோன், ரேகன் குணசேகர போன்றவர்கள் ஆங்காங்கே தந்துள்ளனர்.

அண்மையில் அமெரிக்காவில் உள்ள மஸாசெற் தொழில் நுட்ப ஸ்தாபனத்தின் புத்திஜீவிகள் மத்தியில் "இந்தியாவின் பாதுகாப்புத்தத்துவம்" பற்றி உரையாற்றிய இந்திய பாதுகாப்பு அமைச்சர் கே. சி. பந்த் இந்தியாவுக்கு 'பிராந்தியப் பொலிஸ்காரனாக' (காவல்காரனாக) இருக்கும் உத்தேசம் இல்லையென்றும் இலங்கையிலும் சரி மாலைதீவிலும் சரி அதன் தலையீடல் ஆபத்தான நேரத்தில் அந்நாட்டு அரசாங்கங்களின் அழைப்பின் பேரில் நிகழ்ந்ததென்றும் கூறியுள்ளார். அவை அதேநேரத்தில் இந்தியப் பத்திரிகையாளர் மனோஜ் ஜோஷி, ஹிந்து பத்திரிகையில் எழுதுகையில், இந்தியப்படை இலங்கையை விட்டு வருவதென்பது, கடந்த இரண்டு வருட காலமாக இந்தியா தனது படைகளின் உயிர்த்தியாகத்தின் மூலம் அடைந்த பலனை உதறிவிட்டு வருவதற்கு ஒப்பாகும் என்றுள்ளார்.

இதுபற்றி உயர்நீதிமன்ற நீதிபதி கிருஷ்ண ஐயர் ஹிந்து பத்திரிகையில் எழுதுகையில் இந்தியப்படை இலங்கையில்

சித்திரவேல்

இருப்பது இலங்கை அரசியல் யாப்புக்கு எதிரானதோடு இந்திய அரசியல் யாப்பின் 51 வது சரத்துக்கும் புறம்பானதாகும் என்று கூறியுள்ளார்.

இந்நிலையில் பிறநாடுகள் இந்தியாவை சந்தேகிக்கக் கூடும் என்பதனாலேயே இந்தியப்பாதுகாப்பு அமைச்சர் கே. சி. பந்த் அமெரிக்கா சென்று தம் நிலையை விளக்க நேர்ந்துள்ளதென்றும் கூறப்பட்டுள்ளது. அதே நேரத்தில் கடந்த வாரம் இலங்கை வந்திருந்த சிரேஷ்ட அமெரிக்க ராஜதந்திரி திருமதி ரெறேசிற்று செப்பர் இது பற்றிக் கூறுகையில் அமெரிக்கா இது பற்றி மௌனம் சாதிக்கவே விரும்புகிறதென்றும், ஆனால் கொடுக்கப்பட்ட காலக்கெடுவை மீறி இலங்கையில் அமைதிப்படை தங்குமானால், அது பற்றி அமெரிக்கா மௌனம் சாதிப்பது வரவரக் கஷ்டமாகவே இருக்கும் என்றும் கூறியுள்ளார்.

ரேகன் குணசேகர என்பவர் இந்தியா இலங்கையில் கொண்டுள்ள அக்கறை மூன்று குறிக்கோள்களைக் கொண்டுள்ளதாக கூறுகிறார்.

முதலாவது, இலங்கையின் ஐக்கியத்தைப்பேணவேண்டும். பிரிவினைச்சக்திகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது, அப்படி இடங்கொடுத்தால் அத்தகைய போக்குகள் இந்தியாவிலும் தலைதூக்கிவிடும் என்ற அச்சம்.

இரண்டாவது, இலங்கையிலுள்ள சிறுபான்மை இனத்தவரின் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்ய வேண்டும். முக்கிய

(10ஆம் பக்கம் பார்க்க)

# உயர்தர வகுப்பு மாணவர்கட்கும் பாடசாலைகள் அவசியமே

## சிந்தனை மேடை

மா. குகரூபன்

### கல்வி

“கல்வி என்றால் என்ன? அதன் பெறுபேறுகள் எவை? பல்கலைக்கழகம் சென்றுவிட்டால் மட்டும் கல்வியின் நோக்கங்கள் முற்றுப் பெற்றதாகக் கருதிவிட முடியுமா?” இக்கேள்விகள் இன்று எம்மத்தியிலே பலரால் விடைகாணமுடியாமல் நடமாடுகின்றன. உண்மையில் சிந்தனை மேடை பகுதியிலே 23.06.1989 அன்று கட்டுரை எழுதிய சித்தார்த்தன் அவர்களும் இக்கேள்விகட்கு விடைகாண முடியாமற் திணறி வாசகர்களையும் திணறடித்துள்ளார். உண்மையிற் கல்வியென்பது படித்துப் பட்டம்பெறுவது மட்டும் அன்றி வாழ்க்கைக்குத் தேவையான ஒழுங்குமுறைகள், ஒழுக்கம் என்பவற்றைக் கற்பதேயாகும். எமது இன்றைய சூழ்நிலையிற் படித்துப் பட்டம் பெறுவதென்பது கேள்விக்குறியாகிவிட்ட நிலையிலே எம்மத்தியில் உள்ள கல்வி நிலையங்கள் ஒழுங்குமுதவிய பிறவிடயங்களிற் கவனம் செலுத்துவது மிகவும் அவசியமானதாகும். இது பாடசாலைபோன்ற ஒழுங்கமைக்கப்பட்ட தாபனங்கள் மூலமே சாத்தியமாகும். அவ்வாறன்றி, பரீட்சைக்கு மட்டும் வேண்டிய வினாக்களையும் சிலவேளைகளில் விடைகளையும் மாணவர்கட்குக் ‘கவர்ச்சியாகத்’ திணித்து, அதன்மூலம் சுய விளம்பரங்கள் தேடும் வியாபார நிலையங்களான தனியார் கல்வி நிலையங்கள் மூலம், இவை சாத்தியப்படாது.

### சட்டதிட்டம்

இன்று எமது பிரதேசத்தில் உள்ள பெரும்பான்மையான தனியார் கல்வி நிலையங்களில் பணம் ஒழுங்காகக் கட்டப்பட வேண்டும் என்பதைத் தவிர வேறு எந்தச் சட்டதிட்டமோ இல்லை. மாணவர்கள் விரும்பினால் வகுப்புக்குச் செல்லலாம், விரும்பாது விட்டால் செல்லாது விடலாம். இந்நிலை எமது மாணவர்களின் கல்வியை திசைதிருப்ப உதவுமேயன்றி ஆளுமையை வளர்க்க உதவாது. யாழ்.நகரின் அநேகமான பிரபல ரியூட்டறிகளில் மாணவர்கட்கு இருப்பதற்கே இடம்போதாது. ஆனால், யாழ்.நகர்ச் சினிமாக்களில் புதிய திரைப்படம் குறிப்பாக ஆங்கிலப் படம் வெளியிடப்பட்டால், அன்றையதினம் அரைவாசி வாங்குகளிலேயே மாணவர்கள் அமர்ந்திருப்பார்கள். இந்நிலைதான் மாணவர்களின் ஆளுமையைக் கட்டுப்படுத்தாமல் வளர்க்க உதவுமென்பது சித்தார்த்தனின் கருத்தா?

### பாடசாலை நேரமும் சீருடையும்

பாடசாலை நேரமும் மாணவர்கட்குத் தடையாக இருப்பதாகக் கூறுகின்றார்கள். அதிர்ஷ்டவசமாக எமது தமிழ்ப் பகுதியில் அநேகமான மாணவர்கட்குக் கல்வியே முக்கியமாக உள்ளது. மாணவப் பராயத்தில் அவர்கள் உழைக்கவேண்டிய நிர்ப்பந்தம் இல்லை. இந்நிலையிலே அவர்கள் தமது முழுநேரத்தையும் பாடசாலையிற் செலவிடுவதிற் தவறென்ன? சீருடை விடயமும் இதேபோற்தான். அநேக மாணவர்கள் படித்து முடிந்ததும் பிற்காலத்தில் நேரவட்டவணையுடனும் சீருடையுடனும் வேலை பார்க்கத்தான் போகின்றார்கள். அதேமாதிரியான ஒரு ஒழுங்கமைப்பை மாணவர்களைக் கட்டுப்படுத்தும் ஒரு செயற்பாடு என, நாம் புறக்கணிக்க முடியுமா? அது மட்டுமன்றி சீருடை ஏற்படுத்தப்பட்டதன் நோக்கம் மாணவர்கள் அனைவரும் குடும்பப் பின்னணி, சாதி, மத வேறுபாடுகள் இன்றி ஒரேமாதிரியாக இருக்கவேண்டும் என்பதற்காகவே ஆகும்.

### ஆசிரியர்கள், பாலுரு

பாடசாலை ஆசிரியர்களின் மரபுவழிக்கற்பித்தலில் ஏதாவது தவறு இருக்குமானால் அதை நீக்கிச் சிறந்த ஆசிரியர்களை உருவாக்க முயல வேண்டுமே தவிர அதை விடுத்து விரைவாகப் பயணஞ் செய்வதற்காக ‘லைசென்ஸ்’ இல்லாத சாரதியின் பஸ்ஸில் பிரயாணஞ்செய்வது ஆபத்தானதாகும். பாடசாலைகள் ஆண்கள், பெண்கள் எனப்பிரிக்கப்பட்டிருப்பது நிர்வாக இலகுவிற்காகவேயன்றி, மாணவர்களின் ஆளுமை மீதான அவநம்பிக்கையாலல்ல. அதுவும் சில பாடசாலைகள் மாத்திரமே இவ்வாறு பிரிக்கப்பட்டிருக்கின்றன. பெற்றோர் விரும்பினால் அவ்வாறன்றிக் கலவன் பாடசாலைகளியே மாணவர்களைச் சேர்க்கலாம். அவ்வாறான கலவன் பாடசாலைகளில் ஆண் பெண்களின் சகஜமான பழக்கவுரையாடல்களை ஆசிரியர் கண்டிப்பதென்பது எமது பகுதியில் நான் இதுவரையறியாததொன்று.

### செய்முறைகள்

உயர்தர மாணவர்கட்கு குறிப்பாக விஞ்ஞானமாணவர்கட்கு செய்முறைப் பயிற்சிகள் இன்றியமையாதவையாகும். இச் செய்முறைகள் வாரத்தில் எட்டுமணிநேர ரியூட்டறிகளிற் சாத்தியமானவையா? தற்காலத்தில் ரியூசன்களில் இவை நடைபெறுகின்றனவா?

### புறக்கருமங்கள்

பாடசாலை விளையாட்டுப் போட்டி, சமய தினங்கள் போன்றவை நேரத்தை வீணடிக்கவோ பல்கலைக்கழக அனுமதிக்கோ நடாத்தப்படுவதில்லை. அவை மாணவர்களின் ஆளுமை, மனப்பாங்கு, தலைமைத்துவப்பண்புஎன்பவற்றை விருத்தி செய்வதற்காகவே நடாத்தப்படுகின்றன. இவற்றை உணர்ந்து சில தனியார் கல்வி நிலையங்களே சில விழாக்களை இன்று நடாத்தத் துணியும்போது, மாணவர்களுக்குக் கவர்ச்சி இல்லை என்பதற்காக தவிர்க்கப்பட வேண்டியவையா?

### ஒன்றுபடல்

இன்றைய சூழ்நிலையில் மாணவர்கள் தாபனரீதியில் ஒன்றுபடுதல் அவசியமாகின்றது. இது பாடசாலை மட்டத்திலன்றிச், சமூகத்தால் முற்றாக அங்கீகரிக்கப்படாத ஒழுங்கமைக்கப்படாத ரியூசன்களின் மட்டத்தில் நிகழல் நடைமுறைச் சாத்தியமற்றது.

ஆக, திரு. சித்தார்த்தனின் கட்டுரையில் உயர்தர மாணவர்களும் பல்கலைக்கழகத் தரத்திற்கு ஏறக்குறைய மதிக்கப்பட வேண்டும் என்ற ஆதங்கத்தை தவிர வேறு எதுவும் இல்லை. அதைத் தவிர பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் 20 வயதை அதாவது ரீன் - ஏஜை ( teen - age ) கடந்தவர்களே. ஆனால் உயர் வகுப்பு மாணவர்கள் இவ்வாறு இல்லை. அவர்கள் தமக்குள்ள சுதந்திரத்தை எவ்வாறு காப்பாற்றுவார்கள் என்பதையும் “அறிவு ஜீவிகள்” கவனிக்க வேண்டும்.

ஆகவே, பாடசாலைக் கல்வி முறையில் சிற்சில மாற்றங்களைச் செய்யலாமே தவிர, பாடசாலைகளையும் மாணவர்களையும் வெறுக்கல் எமது பிற்காலச் சந்ததியின் விருத்தியைப் பாதிக்கும் என்பதில் ஐயமில்லை. □

# மனித உரிமைக்காகப் போராடியவர்

றெஜி சிறிவர்தன

கந்தசாமி நினைவுக் குழுவினால் நான் ஒரு சொற்பொழிவாற்ற அழைக்கப்பட்டபோது ‘வன்செயலும் மனித உரிமைகளும்’ என்ற தலைப்பைத் தெரிவு செய்தேன். தன் சக மனிதர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவென்று வாழ்ந்து அந்தப் பணிகளின் போது வன்செயலால் மரணமான ஒரு மனிதனை நினைவு கூருவதற்கு அதுதான் பொருத்தமானது எனக் கண்டேன். எங்கள் நாட்டில், வாழும் உரிமைகள் — மிகவும் அடிப்படையான மனித உரிமைகள் — மறுக்கப்படும் இன்றைய நாட்களில் அதுதான் தாக்கமான ஒரு தலைப்பு என்றும் நான் உணர்ந்தேன். மனித உரிமைகள் இன்று அரச முகவர்களால் ஜனநாயகத்தின் பெயரில் அல்லது நாட்டின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாத்தல் என்ற வகையில் மீறப்படுகின்றன. அது போராளிக்குழுக்களாலும், தேசிய அல்லது சமூக விடுதலை என்ற பெயரில் மீறப்படுகின்றன. ஒன்றை விட்டு மற்றதில் ஈடுபடுவது நியாயமல்ல.

புகழ்பெறாத அரசியல்வாதிகளை அல்லது அரசின் அடக்குமுறை முகவர்களைக் கொன்றுவிட்டு, அவை அவர்கள் புரிந்த கொடுமைகளுக்கான பழிவாங்கல் என உரிமை கோரலாம். பாதிக்கப்பட்டவர் சார்பில் சிலர் மட்டும் கண்ணீர் விடுவார்கள். ஆனால் இந்தச் சறுக்கும் சரிவில் ஏறி விட்டால் எங்குமே நிறுத்தும் சாத்தியம் இல்லை. பொலிசிற்கு தகவல் கொடுப்போரை அகற்றி விட்டு அதனையும் நியாயப்படுத்திக் கொள்ளலாம். ஆனால் அதை அவ்வளவில் நிறுத்தமுடியாது: உன் பாதையில் குறுக்கிடும் எவரும் அழிக்கப்படவேண்டியவர்களே என நீங்கள் ஏற்கனவே நியாயப்படுத்திக் கொண்டதால்.

...... இந்த வழி ஆட்சியைக் கைப்பற்றியவுடன் நின்றுவிடும் எனக் கருதுவதற்கு எக்காரணமும் இல்லை. ஒரு நிரந்தர சச்சரவு சித்தரவதைக் கூடம், கொலை முகாமுக்குத்தான் இது வழிவகுக்கும்.

இவ்வகையில் ஏன் கந்தையா கந்தசாமி இறக்கவேண்டி வந்தது என்பதைப் பார்க்கலாம். அவர் தனி மனிதரது மனச்சாட்சியின், நீதியின் சுதந்திரத்தில் நம்பிக்கை கொண்டிருந்தார். இதனை எந்த அரசியல் தலைவருக்கோ, பிரிவுக்கோ விட்டுக்கொடுக்க அவர் விரும்பவில்லை. அவரது நினைவு மலரைப் பார்க்கையில் ஒரு பகுதி என் சிந்தையை மிகவும் கவர்ந்தது, ‘சற்றடே றிவியூ’ வை ஆரம்பிப்பது பற்றிய அறிக்கையில் அவர் எழுதியது வருமாறு:

இது ஒரு அரசியல் அல்லது பிரிவதற்கான பத்திரிகை அல்ல. இந்த நாட்டின் தமிழ் உரிமைகளிலும் இனத்தொடர்புகளிலும் ஈடுபாடுள்ளவர்களுக்கான ஒரு மேடையே......

பின்னர் ஒரு கடிதத்தில் அவர் குறிப்பிட்டார் “நாம் பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். எவரையும் அடிமையாக்காது முரண்பாடான கருத்துக்களை வெளியிடுவதன் மூலமே அதைப் பெறலாம்.”

அவர் கடத்தப்படுவதற்கு மூன்று கிழமைகளுக்கு முன் அவர் ரி. ஆர்.ஆர். ஒ. குறித்து எழுதியது :

“ஒரு நிறுவனத்தை சுதந்திரமாக இயக்க முடியவில்லையென்றால் அதை மூடிவிடுவது நல்லது”

இத்தகைய ஒரு மனிதர் வாழ்வது எந்தப் பிரிவிற்கும் ஒரு சவாலாக இருக்கும் என நோக்குவதில் அர்த்தமில்லை. இந்த நாட்டில் மிகச் சில மனிதரால் மட்டும் ஈடுபடக் கூடிய ஒரு முயற்சியில் ஈடுபட்டதற்காக கந்தசாமி ஒரு தியாகி என கௌரவிக்கப்படலாம்.

தமிழில் : வளவன் □

# தென்னாசியாவின் முதல் செலியூலர் தொலைபேசி

கடந்த ஜூன் 19ஆம் திகதி இலங்கையில் முதன்முதலாக செலியூலர் (CELLULAR) தொலைபேசித் தொடர்பு பிரதம மந்திரி டி.பி.விஜேதுங்காவால் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இதுவே தென்னாசியாவின் முதல் செலியூலர் தொலைபேசித்தொடர்பு சாதனமாகக் கொள்ளப்படுகிறது. இது இலங்கையில் ஆரம்பிக்கப்படுவதன்மூலம், இதன் பாவனையாளர் நேரத்தை மிச்சப்படுத்துவதோடு, வீட்டிலோ, அலுவலகத்திலோ இல்லாத சமயத்தில் வரும் தொலைபேசித் தொடர்புகளை மேற்கொள்வதற்கென பிரத்தியேகமாக ஒரு செயலாளரை நியமிக்க வேண்டிய நிர்ப்பந்தம், அதற்கான செலவு எதுவும் ஏற்படாது.

இப்புதிய செலியூலர் தொடர்புமுறை, பிரயாணம் செய்து கொண்டிருக்கும்போதோ, வேலை செய்து கொண்டிருக்கும் போதோ, நடந்து கொண்டிருக்கும் போதோ எந்த நேரத்திலும் பாவிக்கக்கூடிய ஒரு நடமாடும் தொலைபேசித் தொடர்பு முறையாகும்.

இது இங்கு ஆரம்பிக்கப்படுவதன்மூலம், இச்சேவை நடைபெறும் உலகின் 37 ஆவது நாடாக இலங்கையும் மாறுகிறது. □

# வரலாற்று நிகழ்வுகள்

O சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், இது பிரெஞ்சுப் புரட்சியின் கொள்கை. இக்கொள்கைகளைக்கூறி பிரெஞ்சு மக்களிடையே புரட்சியை ஏற்படுத்தியவர்கள் வால்டேர், ரூசோ என்ற இருவர்.

O முதலாம் உலகப்போரில் விமானத் தாக்குதலில் இறந்தவர்களின் எண்ணிக்கை: 1117 பொதுமக்கள், 296 வீரர்கள்.

O இங்கிலாந்தை ஆண்ட முதல் மன்னன் 'எக்பேர்ட்' இவன் கி.பி 802 முதல் 839 வரை அரசாண்டான்.

கிரேட் பிரிட்டன் என்ற புதிய பிரிட்டிஷ் அரசின் முதல் மன்னன் 'ஜேம்ஸ் 1. கிரேட் பிரிட்டன் எனப்படுவது இங்கிலாந்தும் ஸ்கொட்லாந்தும் இணைந்ததாகும்.

O 'சிக் பிரீட்' அரண்: பிரான்சிற்கும் ஜேர்மனிக்குமிடையில் ஜேர்மனிக்கு பாதுகாப்பையளிப்பதற்காக 1938 இல் சர்வாதிகாரி ஹிட்டலரால் கட்டப்பட்டது.

O இங்கிலாந்திற்கும் பிரான்சிற்கும் இடையில் போர் தோன்றியது கி.பி. 1338 இல் ஆகும். இறுதிப்போர் 1815இல் வாட்டர்லூவில் நடந்தது.

O இங்கிலாந்தில் பிறந்தும் ஆங்கிலம் தெரியாத மன்னன் ஜோர்ஜ் 1.

O இங்கிலாந்தை ஆண்ட 'அனி' என்ற அரசிக்கு 19 பிள்ளைகள் இருந்தனர். அவளிற்குமுன்னே அனைத்து பிள்ளைகளும் இறந்தன.

O உலகின் சிறந்த அழகியாக கருதப்பட்டவள் கிரேக்க பேரரசியான கிளியோபாட்ரா. இவளது ஆட்சிக் காலம் கி.மு 69–30.

O ரோம் நகர சாம்ராஜ்யம் தோன்றியது கி.மு 509 இல்

— தி. தவபாலன் □

# பிழைகளைப் போட ஒரு கூடை

பிறின்ஸ்ரன் பல்கலைக் கழகத்தில் நியமனம் பெற்ற அல்பேட் ஐன்ஸ்ரைனுக்கு, அலுவலகத்தைக் காட்டிய நிர்வாகிகள், என்னென்ன தளபாடம், கருவிகள் தேவை என்று கேட்டனர்.

ஒரு மேசை, ஒரு கதிரை, பென்சில், பேப்பர் அத்துடன் ஒரு பெரிய கூடை என்ருர் ஐன்ஸ்ரைன்.

ஏன் பெரிய கூடை? என்று கேட்டனர். என் பிழைகளையெல்லாம் எறிவதற்கு, என்ருர் ஐன்ஸ்ரைன்.

□ □

எதையாவது புதிதாக முயற்சிக்கும் திறமை இல்லையென்ருல், வாழ்வதில் அர்த்தமில்லை.

—வின்சென்ற் வன்கோ

# திறமையின் அறிகுறி (O.T.A.)

ஒருவனுடைய திறமை, அவனின் அவதானிக்கும் தன்மையையும் (Observation), அதன் வழியே தொடரும் சிந்தனையையும் (Thought), அச் சிந்தனையால் விளையும் செயல்திறனையும் (Action) பொறுத்தே அமைகிறது.

வாழ்க்கையை அவதானித்து நோக்கும் தன்மையிலே ஒருவனின் அறிவுத்திறன் தங்கியிருக்கிறது. ஒருவனின் கண்களும் காதுகளும் மந்தமாயிருந்தால் அவன் மூளையின் அறிவுப் பகுதியும் அசமந்தமாகவே இருக்கும் என்பது உளவியல் உண்மை.

எங்கள் முன்னிலையில் இருப்பவைகளை உற்று–ஆழ்ந்து பார்ப்பதன் மூலமும், அறிவு நூல்களை வாசிப்பதன் மூலமும், பிறர் என்ன கூறுகிருர்கள் என்று உன்னிப்பாகக் கேட்பதன்மூலமும் நாம் நமது அறிவின் பரப்பை விரிவாக்கிக் கொள்கிறேம்.

பார்வை, படிப்பு, கேள்வி மூலம் பெறுவதுதான் அறிவு என்ருலும் இதில் கேள்வி மூலம் பெறுவதே முக்கிய இடம் பெறுகிறது. குழந்தையானது சிறு பராயத்திலிருந்து கேள்வி மூலமே அறிவைப் பெருக்கிவருகிறது.

ஒரு கருமத்தைப்பற்றிய விபரத்தையும் அதுபற்றிய பல்வேறுபட்ட கருத்துக்களையும் சேகரித்தபின்னர் அக்கருமம் பற்றிய சிந்தனையை ஆரம்பிக்க வேண்டும்.

மூளை என்பது வெறும் ஞாபகத்தை மட்டும் சேகரித்து வைக்கும் ஒரு களஞ்சியமல்ல. அது ஒரு சுறுசுறுப்பான இயக்கச் சக்தியைக் கொண்ட ஒரு தொழிற்சாலைக்கு அல்லது ஒரு கணனிக்குச் சமமானதாகும். மூளையே எந்த ஒரு கருமத்தையும் திட்டமிட்டு ஆலோசனைகள் கூறிச் செயல் வடிவம் கொடுப்பதாகும். இத்தகைய ஆக்கபூர்வமான மூளையின் செயலாற்றலுக்கு ஒரு முடிவேயில்லை.

இறுதியாக வருவதுதான் செயல்வடிவம். செயலுக்கு வரும்போது ஒருவன் ஒரு தொழில் அதிபருக்கு உரிய செயல் திறனும் ஒரு விஞ்ஞானிக்குரிய விஷய ஞானமும் கொண்டு இருந்தால் அவன் வாழ்க்கையில் தோல்வி என்ற பேச்சுக்கே இடமில்லை.

'ஒவ்வ தறிவது அறிந்ததன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாதது இல்'

அப்பா! எவ்வளவு சூட்சுமமாகக் கூறியிருக்கிருன் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த அந்தப் பேரறிஞன்!

— ச. ம. அச்சுதன்

# இலங்கை மாணவிக்கு முதல் பரிசு

இங்கிலாந்திலுள்ள ரேயல் கொமன்வெல்த் சொசைற்றி ஏற்பாடு செய்திருந்த 1987—88 ஆம் ஆண்டின், மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியில், டி பிரிவில் ஆயிரத்திற்கு மதிகமான மாணவர்கள் 32 நாடுகளிலிருந்து பங்கு பற்றினர்.

கட்டுரைத் தலைப்பு ''வளர்ப்புப் பிராணியாக வைத்திருக்க நான் பெரிதும் விரும்பும் மிருகம்'' இலங்கையிலிருந்தும் இப்போட்டியில் பலர் கலந்து கொண்டனர்.

கொழும்பு மகளிர் கல்லூரியிலிருந்து பங்கு பற்றிய ரன்மாலி வண்ணக்குவத்த வடுகே என்ற மாணவி டி. பிரிவின் முதற் பரிசாக £25 பணமும் £15 பெறுமதியான புத்தகங்களும் பெற்ருர். □

# சைவ சித்தாந்த ஆய்வு வட்டம்

ஆ. சபாரத்தினம்

ஞாயிறு (25-6-89) மாலை கத்தோலிக்க திருமறைக் கலாமன்ற மண்டபத்தில் அருட்திரு நீ.சவரிமுத்து அடிகளார் அழைப்பின்பேரில் சைவசித்தாந்த ஆய்வில் விருப்பம் உள்ளவர்களின் கூட்டம் நடைபெற்றது. நல்லூர் ஆதீனகர்த்தரும் வேறு முதிய அன்பர்களும் மங்கள விளக்கு ஏற்றி நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைத்தனர். அழைப்பாளர், 'சிந்துவெளிநாகரிக காலமுதல் சங்ககாலத்தினூடாக இன்று வரை தழைத்திருக்கும் தமிழரின் நாகரிகம் உலகளாவிய பெருமையுடையது; அதன் உன்னத சிகரம் சைவசித்தாந்தம். அது தமிழர் உலகுக்கு அளித்த அருஞ்செல்வம். தமிழராகப் பிறந்த ஒவ்வொரும் தமிழரது மொழியை, இலக்கியத்தை, கலையைப் போற்றுவதுபோல அதனையும் போற்ற வேண்டும்' என வற்புறுத்தினுர். தமது உரையின் தொடக்கத்தில் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவரது முரசொலி இதழ்க்கட்டுரையின் சில பகுதிகளை வாசித்து, இச்சமயம் இந்த மக்களுக்கு இன்றைய அவல நிலையில் எத்தகைய வழிகாட்டப் போகிறது என்ற சவாலை அவர் விடுத்தாரென்றும், அதற்குச் சைவமக்கள் ஏதும் பதில் அளித்ததாகத் தெரியவில்லை என்றும் ஆற்ருமையோடு குறிப்பிட்டார். இந்தியாவில் சித்தாந்ததீபிகை போன்ற ஆங்கிலச் சஞ்சிகைகள் மூலம் இத்தத்துவத்தின் சிறப்பை உலகம் அறிந்தது. இலங்கையில் சபாரத்தினமுதலியார் ஆங்கிலத்தில் எழுதிய நூல் உலகில் கத்ருேர் மத்தியில் சென்று சிறப்புப் பெற்றது. அவை மறு அச்சு ஆக வேண்டும். இளந்தலைமுறையினர் அவற்றை அறிய, படிக்க, சிந்திக்க வழிசெய்ய வேண்டும் என்ருர்.

கிறீஸ்தவ—சைவ அறிஞரிடையே உரையாடலை ஏற்படுத்தும் நோக்கமாக இவ்வாய்வுவட்டம் அமைக்கப்பட்டது எனினும், சைவமக்களே அதிகமாக வந்திருந்தனர். பேசியோரும் பழைய பாணியில் பழம்பெருமைபேசி அமர்ந்தனர். கிறீஸ்தவ சமயத்திற்கு மதமாற்றும் பணி தற்போதைய துன்ப சூழ்நிலையால் அகதிகளாயினவர்கள் மத்தியில் நிகழ்ந்துவருவதுபற்றி இருவர் குறிப்பிட்டனர். அருட்திரு சவரி அதில் சம்பந்தப்பட்டோர் கத்தோலிக்கர் அல்லர் எனத் திடமாகக் கூறினுர்.

கலாநிதி சோ.கிருஷ்ணராஜா பேசும்போது சமயம் வேறு; தத்துவம் வேறு. ஆய்வுவட்டம் சைவசித்தாந்தத்தை தத்துவ அடிப்படையிலேயே ஆய்வது நன்று எனக் கருத்துத் தெரிவித்தார். பல்கலைக்கழக மட்டத்தில் நடைபெறும் சில ஆய்வுகளையும் குறிப்பிட்டார். ஆலயமணி ஆசிரியர் ஈழத்துச் சிவானந்தன் சைவமதத்தை அறிந்து உரையாடலுக்கு முயற்சி செய்யும் சவரி அடிகளாரின் பணியில் மகிழ்ந்தே தாம் தமது சஞ்சிகையில் அவரது படத்தை வெளியிட்டதாகக் குறிப்பிட்டு, தாமும் தமது சஞ்சிகையும் அத்துறையில் இயன்ற ஒத்துழைப்பை நல்கும் என்றும் உரைத்தார்.

மற்ருெருவர் குறிப்புரை கூறும்போது, ''சமய உரையாடல்'' என்பது யதார்த்த வாழ்வில் மிகக்கடினமானது; சென்னையில் இக்னேஷியஸ் இருதயம் அடிகளாரின் 'ஐக்கிய ஆலயம்' இதில் ஓரளவு வெற்றி பெற்றுள்ளது; கரம்பன் குருமடத்தில் இதனை அடியொற்றி முயற்சிகள் செய்யப்படுகின்றன. ஆனல் எண்ணெயும் தண்ணீரும்போல் இரு சமயத்தவர்களும் இருந்துவிட்டுப்போகின்றனர். உண்மையான புரிந்துணர்வும் விளக்கமும் வளரவேண்டுமானுல் வெகுசிலர் கூடிக்கலந்து ஆழ்ந்த படிப்பின் மூலமாகவே அதனைச் சாதிக்கமுடியும். சைவர்கள் சில காலத்துக்கு முன் இந்து அகராதி அல்லது கலைக்களஞ்சியம் ஒன்று தயாரிக்க, மாவிட்டபுரத்தில் கூடி ஆரம்ப முயற்சிகளைச் செய்தனர். பின் அது அணைந்து விட்டது. கிறீஸ்தவக் குருமார் தொடங்கும் பணியைச் செவ்வனே செய்யும் செயல்வீரர். ஆகவே இம் முயற்சி வெற்றி பெறுமென நம்புவோம் என்ருர்.

முப்பதுகளில் கலாநிலையம் என்ற அறிஞர் கழகத்தில் சுவாமி ஞானப்பிரகாசர், நடேசபிள்ளை, கைலாசபதி, (திருநெல்வேலி ஆசிரியகலாசாலை உபஅதிபர்) பண்டிதமணி கணபதிப்பிள்ளைபோன்ற அறிஞர்கள் மாதம் இருமுறை கூடிக் கலந்துரையாடினர். லண்டன் புளூம்ஸ் பெரிகுழு போல அறிவை வளர்த்தனர். கலைப்புலவர் நவரத்தினம் செயலாளராய் இருந்து ஞாயிறு என்ற உயர் சஞ்சிகையையும் 3 இதழ்கள் வெளியிட்டார். ஆனுல் அம்முயற்சிகள் எல்லாம் இடையில் நின்றுவிட்டன. அன்று அழைப்பாளரின் அறிமுகவுரையைக்கூடப் பலர் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை. அவர் றேய்மண்ட் பணிக்கர் இந்துமதத்தை எமது பிதிரார்ஜிதமெனக் கருதினுர். சவரி அடிகளார் சைவசித்தாந்தத்தை நமது முன்னேர் அளித்த அரும்செல்வம் எனக் கருதுகிருர். புனித தோமஸ் அக்குவினஸ் அரிஸ்ரோட்டலின் தத்துவத்தைக் கிறீஸ்தவ சமயத்தின் தத்துவ அடிப்படையாக்கி ஒன்றிணைப்பை ஏற்படுத்தினுர். நம்காலத்தில் பிரெஞ்சு தொல் உயிரியல் விஞ்ஞானி, சுவாமி தெய்யார் த ஷார்டேய்ன் நவீன விஞ்ஞானத்தையும் கிறீஸ்தவத்தையும் இணைத்தார். சவரி அடிகளாரின் முயற்சி சைவத்தையும் கிறிஸ்தவத்தையும் ஒன்றிணைக்கும "என்றுமுளதத்துவத்''தை (perenial philosophy) உயிரூட்டி வளர்ப்பதாகும். □

# நெல்சன் மண்டெலாவிற்கு 'கடாபி பரிசு'

ஆபிரிக்காவின் நிறவெறிக்கு எதிரான நீண்டகால துணிகரப் போராட்டத்தின் தந்தையான நெல்சன் மண்டெலாவிற்கு, புதிதாக அமைக்கப்பட்ட, மனித உரிமைகளுக்கான 'கடாபி பரிசு' கிடைக்கவுள்ளது. இத் தெரிவு 'கிறேற் சாட்டர் ஒவ் ஹியூமன் றயிற்ஸ்' என்ற அமைப்பினுல் நடாத்தப் பட்டது. இத் தெரிவுக் குழுவில் கலந்து கொள்ளுமாறு, சிறீலங்கா எதிர்க்கட்சித் தலைவி சிறீமாவோ பண்டாரநாயக்கவிற்கும் அழைப்பு விடுக்கப்பட்டும் அவர் கடந்த மாதம் லிபியாவில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாமல் போனதும் தெரிந்ததே.

ஆபிரிக்க சுதந்திரத்திற்கும் மனித உரிமைகளுக்குமான போராட்டங்களில் முன் நின்ற மனிதர்— நெல்சன் மண்டெலா – கால் நூற்ருண்டுக்கு மேலாக சிறையில் இருந்தவர். அவரது ஆன்ம பலமும், துணிவும் தன் மக்களுக்கான தியாகமும் அத்தகையது. தனது 75 ஆவது பிறந்த நாளில் அவர் மனைவியும் குடும்பத்தவரும் சிறையில் அவரைச் சந்திக்க, 'விசேட அனுமதி' பெற்று வந்தபோது, எனது சக கைதிகளுக்கில்லாத உரிமையை நான் எடுத்து மகிழ விரும்பவில்லை, என்று கூறி, அவர்களைச் சந்திக்க மறுத்துவிட்டார்.

1988 செப்ரெம்பர் 15 இல், லிபியாத் தலைவர் முஆமர் கடாபி அலி கடாபியினுல் தொடக்கி வைக்கப்பட்ட, ஐ. நா. வின், சர்வதேச பிரகடனத்தின் பகுதியான 'அடிப்படை மனித உரிமைகளை' நிலைநிறுத்துவதற்கான பரிசு இது. □

# மேற்கு நாடுகளில் தமிழ்ச் சஞ்சிகைகள்:

## சில பொதுக்குறிப்புகள்

இன்று தமிழில் வெளிவரும் சஞ்சிகைகள் குறித்துப் பேசுவோர்எவரும் மேற்குநாடுகளிலிருந்து வெளியாகும் சஞ்சிகைகளைத் தவிர்த்தல் முடியாது. மேற்கைரோப்பிய நாடுகளிலும் கனடாவிலும் வாழும் தமிழ்ச் சமூகத்தினர் மத்தியிலிருந்து கடந்த சில ஆண்டுகளாக இச் சஞ்சிகைகள் வெளிவருகின்றன. பார்வை, தூண்டில், சிந்தனை, சுவடுகள், புதுமை, கண், நமதுகுரல் முதலிய சஞ்சிகைகள் நான் பார்த்தவையாகும். இவற்றினை விட மேலும் பல சஞ்சிகைகள் வெளியாவதாய் அறிய முடிகிறது. மேலே குறிப்பிட்ட சஞ்சிகைகளின் பொதுப் பண்புகளைச் சுட்டும் அறிமுகமாக இக்குறிப்பு அமையும்.

### அகதிகளே காரணம்

இலங்கையின் இனப்பிரச்சனை, மேற்கு நாடுகளில் இச்சஞ்சிகைகளின் தோற்றத்திற்கு வழிவகுத்த ஒரு முக்கிய காரணியாகும். குறிப்பாக எண்பதாம் ஆண்டுகளின் முற்பகுதியில் கூர்மையடைந்த இனப்பிரச்சனை சர்வதேச அரங்கில் இலங்கைத் தமிழ் அகதிகள் என்ற புதிய சித்திரத்தைத் தோற்றுவித்தது. தமிழ்ப் பகுதிகளில் இராணுவ ஒடுக்குமுறை, அரசின் பொருளாதார ரீதியான பாரபட்சம் முதலியவற்றுக்கு அஞ்சி முன்னெப்போதும் இல்லாத வகையில் பெருந்தொகையான தமிழர்கள், குறிப்பாக இளம் வயதினர் மேற்கைரோப்பிய நாடுகளுக்குச் சென்றனர். இவர்கள் பிரான்ஸ், ஜேர்மனி, நெதர்லாந்து, டென்மார்க், நோர்வே, இங்கிலாந்து முதலிய நாடுகளில் அரசியல் தஞ்சம் கோரினர். (சமீபகாலங்களில் இலங்கையிலிருந்து வெளியேறும் தமிழர்களின் கவனத்தைக் கனடாவும் ஈர்த்துள்ளது.)

மொழி, கலாசாரம், பொது அபிவிருத்தி போன்றவற்றில் பாரிய வேறுபாடுள்ள அந்நிய நாடுகளிற் பெருந்தொகையினராக வாழும் இந்நிலை, இவர்களிடம் குறிப்பிட்டசில தேவைகளைத் தோற்றுவித்துள்ளது. இவற்றில் ஒன்று வாசிப்புத் தேவையாகும். தமிழில் வாசிப்பதற்கும், தகவல்கள் பெறுவதற்கும் பொழுதுபோக்கிற்கும் கூட நூல்களும், சஞ்சிகைகளும் வேண்டியுள்ளன. இத்துடன் இந்நாடுகளில் வாழும் தமிழ் இளைஞர்களிற் சிலர் இலங்கையில் இருக்கும் போது அரசியலிலும் இலக்கியத்திலும் ஒரு சேர ஆர்வம் கொண்டிருந்தோராவர். இச்சஞ்சிகைகள் சிலவற்றுடன் இவர்களும் தொடர்பு கொண்டுள்ளனர். தற்போது வெளிவரும் சஞ்சிகைகளின் தோற்றத்தை இப் பின்னணியிலேயே விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

### அமைப்பு

மேலே குறிப்பிட்ட சஞ்சிகைகளிற் 'பார்வை' கனடாவின் மொன்றீல் நகரிலிருந்து வெளியாவதாகும். 'தூண்டில்', 'சிந்தனை', 'நமதுகுரல்', 'புதுமை' ஆகியவை மேற்கு ஜேர்மனியிலிருந்தும் 'தமிழ் முரசு' 'கண்' ஆகியவை பாரீஸ் நகரிலிருந்தும் 'சுவடுகள்' ஒஸ்லோவிலிருந்தும் பிரசுரமாகின்றன. இவை அமைப்பிலும் அளவிலும் ஏறத்தாழ ஒரே வகையின. 20 செ. மீ. X 15 செ. மீ. அளவில் சராசரி 40-50 பக்கங்கள் கொண்டவையாக தட்டச்சிலும் கையெழுத்திலும் ஆக்கப்பட்டு போட்டோ பிரதி முறையில் தயாரிக்கப்பட்டவை. போட்டோ பிரதி செய்தல் இந்நாடுகளில் மிக மலிவு ஆகும். இவ்வசதியை இவை பயன் படுத்துகின்றன. தமிழ் கணனி ஒன்று 'சுவடுகள்' குழுவினருக்குக் கிடைத்திருப்பதாகவும், அதனைப் பயன்படுத்தி இவ்வருடத்துச் சுவடுகள் சில வெளிவந்ததாகவும் அறிந்தேன் 'பார்வை' யும் சில பக்கங்களில் குறிப்பாக விளம்பரங்களுக்கு கணனி அச்சினைப் பயன்படுத்தியுள்ளது. இச்சஞ்சிகைகள் பெரும்பாலும் மாதாந்தம் பிரசுரிக்கப்படுபவையாகும்.

### மேற்கு ஜேர்மனியில்— கனடாவில்

மேலே குறிப்பிட்ட சஞ்சிகைகளுள் மேற்கு ஜேர்மனியின் ஸ்ருகாட் நகரிலிருந்து வெளிவரும் 'சிந்தனை' சஞ்சிகை 85 ஆம் ஆண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டது. "தமிழ் மக்களின் இருள் சூழ்ந்த, நிச்சயமற்ற நிகழ்காலத்தில் தெளிவான சிந்தனை ஊடாக முறையான அரசியல் கோட்பாடுகளை ஆராய்ந்து ஸ்திரமான

□□ சித்ரா □□

பாதையில் செல்வதே நமது குறிக்கோளாகும்" என்ற வாசகத்துடன் இது பிரசுரிக்கப்படுகிறது. இச்சஞ்சிகையில் பொதுவாக அரசியல் கட்டுரைகளும் செய்திக்குறிப்புகளுமே இடம் பெறுகின்றன. வெளிப்படையான அரசியற் கருத்துடைய கவிதைகளும் ஆங்காங்கு இடம் பெற்றுள்ளன. 'தூண்டில்' சஞ்சிகை மேற்கு ஜேர்மனியில் இயங்கும் தென்னாசிய நிறுவனத்தால் வெளியிடப்படுவது. இந்நிறுவனம் 1986 ஆம் ஆண்டிலிருந்து வெளியிட்டுவந்த தமிழ்ச்செய்திக் குறிப்பே 1988 இல் தூண்டில் சஞ்சிகையாக மாற்றம் பெற்றது. இலங்கைச் செய்திகள், அரசியல் தஞ்சம் தொடர்பான சட்டங்கள், செய்திகள் ஆகியவற்றுடன் கவிதை, கட்டுரை, சிறுகதை, தொடர்கதை முதலியனவும் தூண்டியில் முக்கிய இடம் பெறுகின்றன. மொன்றீல் நகரில் இயங்கும் தமிழர் ஒளி இயக்கத்தின் முயற்சியால் 'பார்வை' வெளிவருகிறது. "நடுநிலையிலிருந்து நல்ல விடயங்களை மக்களுக்குத் தெரியப்படுத்தும்" பல்சுவை இதழாக அமைவது இதன் நோக்கமாகும். அரசியல் கட்டுரைகளுடன் இலக்கியக் கட்டுரைகள் இடம் பெறுவது இதன் சிறப்பம்சமாகும். இங்கு குறிப்பிடப்படும் சஞ்சிகைகளுள் இலக்கியத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதாகப் பார்வை விளங்குகிறது.

### பெண்களின் வெளியீடு

இங்கு குறிப்பிடப்பட்டவற்றில் இரு சஞ்சிகைகள் பெண்கள் ஸ்தாபனங்களால் வெளியிடப்படுபவை என்பது குறிப்பிடற்குரியது. 'கண்' பரிஸில் இயங்கும் இலங்கை மகளிர் சங்கத்தினாலும் 'நமதுகுரல்' ஹேர்ன பெண்கள் வட்டத்தினராலும் வெளியிடப்படுபவையாகும். கண் பத்திரிகையில் இடைக்கிடை பிரெஞ்சு மொழியிலும் கட்டுரைகள் வெளியாவதுண்டு. சுய ஆக்கங்கள் தவிர வேறு பத்திரிகைகளிலிருந்து பொருத்தமான கட்டுரைகளையும் கண் மறுபிரசுரம் செய்கிறது. உதாரணமாக, பெண்ணின் குரல் – எட்டாவது இதழில் வெளிவந்த 'எமது சமூகமும் பெண்களும்' கண் இதழில் இடம் பெற்றுள்ளது. பெண்களின் இத்தகைய பிரசுர முயற்சிகள் வரவேற்கத்தக்கவை. எனினும் பெண்கள் பிரச்சனைகளை அணுகுவதற்கும் தீர்ப்பதற்கும் உரிய பொருத்தமான, தெளிவான நிலைப்பாடு இவற்றுக்குக் குறைவு என்பது, இச் சஞ்சிகைகளின் எனக்குக் கிடைத்த இதழ்களைப் பார்க்கும்போது தெரிகிறது. இதனை நிவர்த்திசெய்ய முயலவேண்டும். மேலும் இன்னோர் விடயம், சொந்த நாட்டைவிட்டுப் புலம் பெயர்ந்து வாழும் மக்கட் கூட்டத்தினர் எதிர்நோக்கும் பிரச்சனைகளுக்கு பெண்களும் உள்ளாவதுடன் மேலதிகமாக வேறு பிரச்சனைகளையும் எதிர்நோக்குகின்றனர். அந்நிய சூழல், மொழி, வீடுகளுள் தனிமைப்பட்டுக் கிடக்கும் நிலை ஆகியவை ஆண்களைவிடப் பெண்களை அதிகளவு 'அந்நியமாதலு'க்கு உட்படுத்துகின்றன. இத்தகைய பிரச்சனைகளை இனங்கண்டு உதவ பெண்கள் அமைப்புக்கள் முன்வரவேண்டும். சஞ்சிகைகள் கூட பெண்களின் தனிமைப்பட்ட நிலையைக் குறைப்பதிலும் அவர்களை ஒருங்கிணைப்பதிலும் உதவலாம்.

### தமிழர் அரசியல்

இங்கு குறிப்பிட்ட சஞ்சிகைகள் யாவற்றிலும் காணப்படும் பொதுத்தன்மை, இலங்கைத் தமிழ்ப் பகுதிகளின் அரசியல் பற்றிய அக்கறையாகும். இந்த அக்கறை செய்திகளாகவும் அரசியல் விமர்சனமாகவும் வெளிப்படுகிறது. தமிழ்மக்களின் பிரச்சனைகளுக்கு நீதியான, சமாதானத்தை நிலைக்கச் செய்யும் தீர்வு வேண்டும் என்பதை இச்சஞ்சிகைகள் யாவுமே வலியுறுத்துகின்றன, தமிழ் குழுக்களிடையே ஒற்றுமையும் இவை விழையும் இன்னோர் அம்சமாகும். இச் சஞ்சிகைகளில் இடம்பெறும் கவிதைகளில் அதிகமானவையும் இக்கருத்துக்களைப் பிரதிபலிக்கின்றன.

### தொடர்கதை

பார்வை, தூண்டில், ஆகிய இரு சஞ்சிகைகளும் தொடர்கதைகளைப் பிரசுரிக்கின்றன. பார்த்திபன் எழுதும் 'கனவை மிதித்தவன்' என்ற தொடர்கதை தூண்டிலில் இடம்பெறுவது. ஜேர்மனியிலும், இலங்கையிலும் கதை நடைபெறுகிறது. ஜேர்மனியில் அகதிகளாயுள்ளோரும் இலங்கையில் தமிழர்களும் எதிர்நோக்கும் அரசியற் பிரச்சனைகளைச் சுற்றிக் கதை ஓடுகிறது. எனினும் கதையில் இறுக்கமும் மையக் குவிவும் குறைவாகவேயுள்ளன. 'பார்வை' யில் செழியன் எழுதும் 'ஒரு மனிதனும் எங்கள் தேசமும்' எனும் தொடர்கதை இடம் பெறுகிறது. இலங்கையில் இராணுவ அடக்குமுறையால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் பாதுகாப்புக்காக இந்தியாவுக்குச் செல்வதைப் பின்னணியாகக்கொண்டு இக்கதை ஆரம்பமாகியுள்ளது. இவ்விரு சஞ்சிகைகளும், சுவடுகளும் சிறுகதைகளைப் பிரசுரிப்பதில் ஆர்வம் காட்டுகின்றன.

### கவிதை

கவிதைகளுக்கு எல்லாச் சஞ்சிகைகளும் இடமளித்துள்ளன. பார்வையில் செல்வம், செழியன், ஆனந்த் பிரசாத் ஆகியோர் அடிக்கடி எழுதுகின்றனர். சேரன், ஜெயபாலன் ஆகியோரின் சில கவிதைகளும் மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளன. புதுமை சஞ்சிகையும் கவிதைகளை வெளியிடுவதில் ஆர்வங்காட்டுகிறது. குறிப்பாக ஜெயபாலனின், ஐரோப்பியப் பின்னணியுடைய சில புதிய கவிதைகள்—'பைன் மரக்காடும் இலையுதிர் காலமும்' போன்றவை புதுமையில் வெளிவந்துள்ளன. மொழிபெயர்ப்புக் கவிதைகளும்குறிப்பிடத்தக்கன. பார்வை ஜனவரி '89 இதழில் உருதுக் கவிஞர் பெய்ஸ் அகமது பெய்ஸின் இரு சிறு கவிதைகள்; செப்டம்பர் '88 இதழில் கறுப்பு இயேசுநாதர், சிரிக்கக் கற்றுக்கொடு மகனே!; சுவடுகள் நவம்பர் '88 இதழில் கறுப்புத் தொழிலாளிகள் எனும் அங்கோலாக் கவிதை முதலியவை மொழிபெயர்ப்புக் கவிதைகளுக்கு உதாரணங்களாகும்.




### மறுபிரசுரம்

இச்சஞ்சிகைகளின் இன்னோர் பொதுத்தன்மை இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் ஏற்கனவே பிரசுரமானவற்றில் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து மறுபிரசுரம் செய்வதாகும். பார்வை, சுவடுகள் ஆகியவை இதனைத் தொடர்ச்சியாகச் செய்கின்றன. வாசகர்களின் ரசனையையும் அறிவையும் மேலும் உயர்த்தும் வகையில் இம்மறுபிரசுரங்கள் அமைகின்றன. இதுமிக வரவேற்கக் கூடியதே. எனினும் இவற்றைப் பிரசுரிக்கும்போது சஞ்சிகையாசிரியர்கள் இவை எங்கிருந்து பெறப்பட்டன என்பதை மறக்காமல் குறிப்பிடுதல் தர்மமாகும். 'அலை' யில் வெளியாகிய 'கோசலை' என்னும் சிறுகதை 'பாலத்'தில் மறுபிரசுரம் செய்யப்பட்டது. இது பாலம் சஞ்சிகை

(11ஆம் பக்கம் பார்க்க)



## அனைத்தும் இழந்தவனின் அறிக்கை

— சமீர் அல் — காசம்
பலஸ்தீனியக் கவிஞர்.

எனது கண்களில் எரியும் மெழுகுவர்த்தியினை
நீ அணைத்துவிட்டாலும்
எனது இதழ்களின் முத்தங்களை
நீ உறைய வைத்துவிட்டாலும்
நான் பிறந்த மண்ணின் காற்றை
நீ சாபங்களால் நிரப்பினாலும்
எனது வேதனையை மௌனமாக்கினாலும்
எனது நாணயத்தைக் கள்ளத்தனமாக
வார்த்தாலும்
எனது குழந்தைகளின் முகங்களிலிருந்து
புன்னகையைத் துடைத்தெறிந்தாலும்
ஆயிரம் சுவர்களை நீ கட்டியெழுப்பி
அவமானத்தை என் கண்களில் திணித்தாலும்
மானுடத்தின் பகைவனே
சமரசம் என்னிடத்தில் இல்லை.
இறுதிவரை
நான் போராடுவேன்.

மானுடத்தின் பகைவனே
கோட்டை மதில்களில் கொடிகள்
ஏற்றப்படுகின்றன.
காற்று வெளிகளில்
அழைப்புகள் குவிகின்றன.
அவற்றை நான் எங்கும் காண்கிறேன்
காற்றோடு மோதி முந்துகின்ற பாய்மரங்களை
அடிவானத்தில் நான் காண்கிறேன்.
கடலோடியின் கப்பல்கள்
திசைதிருப்பும் கடல்களிலிருந்து
வீடு நோக்கித் திரும்புகின்றன.
உதயமாகிறது சூரியன்
முன்னேறுகிறது மானுடம்
அதன் பொருட்டு
சூளுரைக்கின்றேன் நான்:
சமரசம் என்னிடத்தில் இல்லை
இறுதி வரை
போராடுவேன்
போராடுவேன்.

ஆங்கிலம் வழி தமிழில்: எஸ். வி. ராஜதுரை
வ. கீதா
நன்றி: பாலம் □

## மனிதம் வெல்லும்

காவியம் மண்ணில் தோன்ற
கற்பனை வளமே போதும்
சொற்களைப் புணர்த்தி சொர்க்கம்
படைத்திடல் மட்டும் வேண்டாம்.

மதிதனை விதியா வெல்லும்
விதிதனை மதியாவெல்லும் என்ற
கதிதனை உணர்ந்தால் இங்கு
கவலையை மனிதன் வெல்வான்

கவலைகள் தம்மை வென்றால்
கனவுகள் எங்கே செல்லும்
திவலையாய் சிதறி மண்ணில்
ஒழிந்திட மனிதம் வாழும்

வாழ்வினைக் கனவா வெல்லும்
மாற்றமே காணச் சொல்லும்
தாழ்வினை உழைப்பே வெல்லும்
தரணியை ஏய்ப்போர் வீழ்வர்

கற்பனை கடந்த வாழ்வை
கருதினால் பெறலாம் மண்ணில்
விற்பனர் மேடை வேண்டாம்
விளங்கிடு மனிதம் வெல்லும்

மானிடம் வாழ்வை வென்றால்
வதைகளுக் கிடம்தா னேது
மானிடம் கனவில் வீழ்ந்தால்
மனிதனை மரணம் வெல்லும்.

— வளவை வளவன் □

# இளம் ஓவியர் சதீஸின் ஓவிய, சிற்பக் கண்காட்சி

தற்பொழுது யாழ்ப்பாணத்தில் அடிக்கடி ஓவியக்கண்காட்சிகள் இடம் பெறுவதும், இளம் ஓவியர்கள் அறிமுகமாவதும், ஓவியம், சிற்பம் போன்ற விடயங்கள் பற்றி முன்னோடியான பத்திரிகைகளில் விமர்சனங்கள், கட்டுரைகள் அவ்வப்போது இடம் பெறுவதும் மிகவும் வரவேற்கத்தக்க ஆரோக்கியமான நிகழ்வுகள். குறிப்பாக நவீன ஓவியங்கள், சிற்பங்களை மக்கள் தொடர்புச் சாதனங்கள், கண்காட்சிகள் மூலம் மக்களுக்குப் பரிச்சயப்படுத்துவதனால்தான் அவற்றைப் புரிந்துணர்ந்து ரசிக்கும் மக்களின் வீதம் அதிகரிக்கும்.

ஒரு இளம் ஓவியன் தன்னை மெருகு படுத்தி தனது துறையில் மேலும் முன்னேறுவதற்கு பிறரின் ஊக்குவித்தலும் மக்கள் மத்தியில் அவன் அறிமுகமாதலும் முக்கியமாகிறது. இதற்குக் கண்காட்சி ஒரு உந்து கோலாக அமைகிறது. இந்த வகையில் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த இளம் ஓவியர் அ. சதீஸ் அவர்களின் ஓவியக் கண்காட்சி ஜூன் 30 ஆம் திகதி தொடக்கம் ஜூலை 2ஆம் திகதி வரை யாழ். பல்கலைக் கழக கலைப்பீட மாணவர் பொதுவறையில் நடைபெற்றது.

இவரை வெளிச்சத்திற்குக் கொண்டுவந்து மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்துவதற்காக இவரை ஊக்குவித்து இக்கண்காட்சியை ஒழுங்கு செய்வதில் கணிசமான பங்கு வகித்தவர் இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர் திரு. நா. உருத்திரபசுபதி ஆவார். அவர் ஓவியர் சதீஸ் அவர்களின் அயலவரும் ஆவர். அவரது வீட்டில் ஓவியரைச் சந்திக்க நேர்ந்ததோடு உரையாடி, சில கலைப்படைப்புகளையும் காணும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. கிட்டத்தட்ட ஐம்பதுக்கு மேற்பட்ட ஓவியங்கள்,

**ரமணி**

அதோடு பிரதிசெய்த ரூபாய் நோட்டுக்கள், முத்திரைகள், சீமெந்துச் சாந்தினால் உருவமைக்கப்பட்ட சிற்பங்கள், மரச்செதுக்கு வேலைகள் போன்ற பல ஆக்கங்கள் இவற்றுள் அடங்கும்.

இவர் முறையாக எவரிடமும் ஓவியமோ சிற்பமோ பயிலவில்லை. பரம்பரை வழியாக வந்த கைத்திறனோடு கூடிய சுய முயற்சியே இவரின் படைப்புகளின் உந்து சக்தியாகும். லாவகமான கைத்திறன் கொண்ட இவர் மூக்கில் விரல் வைக்கும் அளவுக்கு ரூபாய் நோட்டுக்களையும் முத்திரைகளையும் சிறிய அளவில் நுட்பமாகப் பிரதி செய்திருக்கிறார். இவருடைய ஓவியங்களில் உருச் செறிவும் கற்பனை ஆக்கமும் சிறிது குறைவாகக் காணப்பட்டாலும் நிறங்கள் பற்றிய பிரக்ஞை நிறைய இருக்கிறது. கற்பனையாற்றலை வளர்த்துக் கொண்டால் எதிர் காலத்தில் இவர் குறிப்பிட்டுக் கூறக்கூடிய ஒரு சிறந்த ஓவியராகத் திகழ்வார். கற்பனையும் கைத்திறனும் இணையும் பொழுதுதான் கலைப்படைப்பு உயிர்ப்புப் பெற்று அதனூடாகப் பல சங்கதிகளை எமக்குக் கூறுகிறது. இவரின் முப்பரிமாணக் கலைப் படைப்புகளான அர்த்த நாரீஸ்வரர், நடராஜர் போன்றவற்றில் மூவளவுக் கைத்தேர்ச்சியில் கணிசமான பரிச்சயம் தெரிகிறது. மரச் செதுக்கு வேலைகளில் கைவினைத் திறனையும் இடைக்காண்டல் அறிவையும் காணக்கூடியதாக இருக்கிறது.

இவர் ஓர் இளம் கலைஞர் என்ற போதும் இவரின் ஆக்கங்கள் ரசிக்கக் கூடியதாக இருக்கின்றன. எதிர்காலத்தில் பிரகாசிக்க இவர் இத்துறையில் அயராது உழைத்து ஓவியத்தில் உள்ள பல சங்கதிகளையும் பரிமாணங்களையும் அறிதல் வேண்டும். அதோடு சிறந்த வழிகாட்டல் மூலம் தன்னை வளர்த்துக் கொள்வது மிக அவசியமாகும். சதீஸ் போன்ற திறமை வாய்ந்த இளம் ஓவியர்களின் திறனை மேலும் வளப் படுத்தி நெறிப் படுத்துவதற்கு ஏற்ற ஒரு நுண் கலைக்கல்லூரி யாழ்ப்பாணத்தில் இல்லாதது பெரும் குறையாகும். அதோடு நல்ல தாரு "ஓவியக் கண்காட்சியகம்" நிறுவப்பட வேண்டியதும் மிக அவசியமானதாகும். □

# ஆக்க இசைக் கலைஞன் — கண்ணன்

கண்ணன் கோஷ்டி பற்றிக் கேள்விப்பட்டிருப்பவர்கள் பலர். இன்றைய இளைய சந்ததி அறியாதிருந்தால் அது அவர்களது பிழையல்ல. சினிமாப் பாடல்களுக்காக வெகு சனங்கள் மத்தியில் பெரிதும் மதிக்கப்பட்ட கோஷ்டிகளில், கண்ணன் கோஷ்டி பிரதானமானது.

ஈழத்துத் தமிழ் மெல்லிசைப் பாடல்களின் வளர்ச்சிக்குக் கண்ணனும் கண்ணன் கோஷ்டியும் ஆற்றிய பங்களிப்பு, காத்திரமானது. இது தனித்து ஆராயப்பட வேண்டிய விடயமாகும்.

இந்தக் கண்ணன் கோஷ்டியின் மூலவரான முத்துக்குமாரு கோபாலகிருஷ்ணன் என்பவரை அறிந்து வைத்திருப்பவர்கள் குறைவு. கண்ணனது இயற் பெயரை அறிந்து வைத்திருப்பது போலவே, இசையமைப்புத் துறையில் அவரது ஆற்றலைச் செவ்வனே அறிந்து வைத்திருக்கும் வட்டமும் குறுகியதே.

கண்ணனின் குடும்பம் கலையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டது. இசை, கைவினை, நாடகம் அவரது குடும்பத்தின் அம்சமாக அமைவது.

1943 மார்ச் 13 இல் யாழ்ப்பாணத்து வண்ணார் பண்ணையில் பிறந்த கண்ணன் இசைக் கலையை 'இசையரசு' ந. சண்முகரத்தினத்திடமும் 'சங்கீத பூஷணம்' ராஜலிங்கத்திடமும், 'வீணை'யை கிருஷ்ணமூர்த்தியிடமும் கற்றுக்கொண்டார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் மெல்லிசை இசையமைப்பாளராக விருந்த கண்ணன் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்கும் மெல்லிசைப் பாடல்களை இசையமைத்து வழங்கியுள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வெளியீடான பாரம்பரிய இசைக்கோலங்கள்

**சி. ஜெயசங்கர்**

இசைத்தட்டு, கண்ணனது இசையமைப்புத் திறனை வெளிப்படுத்திநிற்கும் மற்றுமொரு படைப்பாகும். இவைதவிர மேலும் பல இசை நாடாக்கள் கண்ணனது இசையமைப்பில் வெளிவந்துள்ளன.

இதில் குறிப்பிடப்படவேண்டிய விடயமென்னவெனில், பெரும்பாலும் பயில்முறை (அமெச்சூர்) கலைஞர்களை வைத்தே கண்ணன் படைத்தலை நிகழ்த்தியுள்ளமை ஆகும்.

இவற்றுடன், ஈழத்துத் தமிழ் நாடகத்துறைக்கு கண்ணனின் பங்களிப்பு தனித்து ஆராயத் தக்கது. நாட்டார் பாடல்களையும், தமிழ் மற்றும் மொழிபெயர்ப்புக் கவிதைகளையும், நாடகத்திற்கென இசையமைத்து வழங்கியுள்ளார். இவற்றிற் சில ஒலிப்பதிவு நாடாக்களில் பதிக்கப்பட்டுள்ளன.

'கோமாளிகள்', 'ஏமாளிகள்', 'தெய்வம் தந்த வீடு' ஆகிய திரைப்படங்களுக்கும் கண்ணன் இசையமைத்துள்ளார். வேறும் சில, அரைகுறையில் நின்றுவிட்ட திரைப் படங்களிலும் இசையமைப்பாளராகப் பணி புரிந்துள்ளார்.

செவிகளினூடு தொடர்பு கொண்டு மனித மனங்களை வெற்றி கொள்வது கண்ணனுக்குக் கைவந்த கலை. கர்நாடக இசை, இந்துஸ்தானி சங்கீதம், மேற்கத்தையஇசை, நாட்டாரிசை என்பவற்றில் கொண்டுள்ள புலமை அவரது படைத்தலுக்குப் பெரும் பலமாக அமைகிறது. பல்வேறு இசைக்கருவிகளை மீட்டுவதிலும் வல்லுனரான கண்ணன், ஒரு இசையமைப்பாளன் கொண்டிருக்கவேண்டிய 'ஆக்கத்திறன் நிறைந்த கற்பனை வளம்' கொண்டவர்.

(11ஆம் பக்கம் பார்க்க)

தேசியஇனப் பிரச்சினைக் கதை—6

# கிருஷ்ணன் தூது

சாந்தன்

ஈழத்து இலக்கியக் களத்தில் எழுபதுகளில் முகிழ்ந்தவர்களில் ஒருவர் **சாந்தன்**.

**பார்வை, ஒரே ஒரு ஊரிலே, முளைகள், கிருஷ்ணன் தூது, இன்னொரு வெண்ணிரவு** ஆகிய சிறுகதைத் தொகுதிகள் இதுவரை வெளிவந்துள்ளன; இவைதவிர, வேறு நான்கு நூல்களும் வெளியாகியுள்ளன.

இச்சிறுகதை 'கிருஷ்ணன் தூது' தொகுதியிலிருந்து எடுக்கப்பட்டது.

## 1

காலையில் வந்து கையெழுத்து வைக்கிறதற்கு அடுத்த வேலை துடைக்கிறதுதான். லாச்சியைத் திறந்து டஸ்ரரை எடுத்து, வரைபலகையையும் 'ட்ராஃப்ரிங் மெஷி'னையும் அழுத்தித் துடைக்க வேண்டியிருக்கும். பியோன்மார் சாட்டுக்குக் கொடுத்து விட்டுப் போயிருக்கக்கூடிய இரண்டு தட்டுதல் போதாது. ஒரு சொட்டு ஊத்தை போதும் - படத்தைப் பாழாக்க.

வெள்ளிக்கிழமை உந்தவேலை பார்த்துக் கொண்டிருந்தபோதுதான், சேனாதி கூப்பிட்டான். துடைத்து முடித்து 'வாஷ் பேஸி'னில் கையையும் கழுவி விட்டு சேனாதியடிக்குப் போனபோது, அவன் அதைக் காட்டினான்.

''என்ன, உது ?''

ஒரு அச்சு புறூஃப், சின்னத் துண்டு. 'நலன் செய் சங்கம்' என்று போட்டு, எதிரே கந்தோரின் பெயர் இருந்தது. பிறகு விலாசம், தொலைபேசி எண். கீழே, தலைவர், செயலாளர், பொருளாளர், ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு உப, உப, உப. சேனாதியின் பெயர், உப-செயலாளர் என்பதற்கு எதிரிலிருந்தது. எல்லாம் இரண்டு மொழிகளில் — தமிழில்லை.

சினமாய் வந்தது.

''லெற்றர் ஹெட்தானே?''

சேனாதி தலையாட்டினான்.

''இங்லீஷிலை போட்டிருக்கிறதைத் தமிழிலை போட்டால் என்ன?''

''என்னவோ, அவங்கட வேலை — ''

''ஆர் அடிப்பிக்கிறது?''

''காரியதரிசி - லயனல்..''

''கேட்கவா?—''

கூப்பிட்டதும் லயனல் எழும்பி வந்தான்.

''விவே, இதுதான் எங்கட லெற்றர் ஹெட் — எப்படியிருக்கு?''

''எந்தப் பிரஸ், மச்சான்?'' —விவே கேட்டான்.

லயனல் சொன்ன அச்சுக்கூடம், அதிகமாகத் தமிழ் வேலை செய்கிற இடம்,

''லயனல், இதிலை தமிழையும் நீங்கள் போட்டிருக்கலாமே?''

''இடந்தானே மச்சான், பிரச்சினையாயிருக்கு?''

—லயனல் ஒரு நிமிடந் தயங்கிவிட்டுப் பிறகு சொன்னான்:

''......இப்பவே பார், பேப்பரிலை கால்வாசி போச்சு!''

''அப்ப அந்த ஆறு பேருடைய பெயரையும் எடுத்திடலாமே?''

''அது அவசியம்... ''

''சின்ன எழுத்தாகப் போடுறது?..''

''கொஞ்சம் பளிச்சென்று இருக்க வேண்டாமா?''

ஒரு கூட்டம் கூடியிருந்தது. இன்னும், காமினி, கன்டொஸ், ரஞ்சித், சச்சி, சேனாதியிடமிருந்து கன்டொஸ் அந்த புறூஃபை வாங்கிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''சரி, இங்லீஷை எடுத்திட்டுப் போடுங்களேன்?''

''இங்லீஷா ? எத்தினை கொம்பனிகளோட தொடர்பு கொள்ளவேண்டி வரும்? அதை எடுத்திட்டு...''

''எந்தக் கொம்பனி யெண்டாலும், பருத்தித் துறைக்கும் டொன்ட்ராவுக்கும் இடையிலை உள்ளதுதானே?''

''எண்டாலும்...''

''இங்லீஷ், இங்கே எத்தினை பேருடைய பாஷை? அதை எடுத்திட்டு, அங்கத்தவர்களிலை நாற்பது வீதம் பேருடையபாஷையைப் போட்டா, என்ன?'' சச்சி கேட்டான்.

''விவே, இதுக்கு முதல் லெற்றர் ஹெட் இல்லை றபர் ஸ்ராம்ப் தானே பாவிச்சது?...'' என்றான் ரஞ்சித்.

''ஓ ?...''

''அது தனிச் சிங்களத்தில் தானே இருந்தது? அதுக்கெல்லாம் ஒண்டும் பேசாமல் இருந்தீங்களே, இதற்கு மாத்திரம் ஏன் ?...''

இந்த நேரத்திலும் சிரிப்பு வந்தது. ஒரு பிடி கிடைத்த மாதிரியும் இருந்தது, விவேகானந்தனுக்கு.

''அந்த ஸ்ராம்பிலை 'தமிழையும் போடு' எண்டு நாங்கள் கேட்டிருந்தா, அது நடைமுறை சாத்தியமில்லை. இந்த அளவு'' இடது உள்ளங்கையில் வலது சுட்டு விரலால் ஒரு சின்ன வட்டம் போட்டுக் காட்டினான்.

''இந்த அளவு வட்டத்துக்குள்ளை இரண்டுபாஷைபோடு, மூண்டு பாஷைபோடு—எண்டு நாங்கள் கேட்டிருந்தா, அது முட்டாள்தனம்...''

''இது அப்படியில்லை. வடிவாப் போடலாந்தானே?...'' கன்டொஸ் கேட்டான்.

''இப்ப என்ன செய்யிறது மச்சான், அடிச்சாச்சே?...''

''இல்லை, இது புறூஃப்தான், இப்பவும் வடிவாச் சேர்க்கலாம்—''

பிறகு விவே சொன்னான்:

''மச்சான் இதெல்லாம் நாங்கள் கேட்டு நீங்கள் போடுகிற விஷயமில்லை. நீங்களாகவே உணர்ந்து போடுகிறதுதான் அழகு. இது அரசியலில்லை; குடும்பம் மாதிரி. நல்லுறவுக்கும் சிநேகிதத்துக்கும் ஒரு பரஸ்பர மதிப்பு தேவையில்லையா?... இப்படி சின்ன சின்ன விஷயங்களில் கூட...''

—முடிக்க முதல் மிஸ்டர் பெர்ணண்டோ வந்து விட்டார்.

''ஐஸே, இப்ப எத்தினை மணி? என்ன செய்யிறீங்கள் எல்லாரும் இங்கை?''

## 2

அரசமரம் சலசலத்தது. பென்னம் பெரிய மரம். கந்தோரின் இந்தளவு பெரிய முற்றத்தில் ஒரு பொட்டு வெயில் பட விடாது. காற்றடிக்கிற நேரங்களில் பாடும். இப்போது வைசாகம் முடிந்த கையோடு, புதுப்பச்சை இலைகளும் வெள்ளைக் கடதாசிச் சோடினைகளுமாய்ப் பொலிந்து நிற்கிறது.

''எண்டாலும், நீர் அப்பிடி அவனோடை பேசியிருக்கக் கூடாது'' என்றான், சேனாதிராசா.

''எப்பிடி? ''

''அவ்வளவு கடுமையா ..... சண்டை பிடிக்கிற மாதிரி...''

''கடுமையா? சண்டையா?'' —விவே திகைத்துப் போனான்.

''அதை அவன் ஒரு சவாலாக நினைக்கலாம்— 'இப்படிக் கேட்டு போடவோ' எண்டு...''

''கேளாமலே போட்டிருந்தால் வடிவுதான்—''

'' சச்சி, நீர் கொஞ்சம் பேசாம இரும்...'' சேனாதிக்குக் கோபம் வரப்பார்த்தது.

''நான் அவனை ஏச இல்லை... சிநேகிதன் எண்ட முறையிலை அதைக் கூடச் சொல்லக் கூடாதா? ''

''இல்லை அண்ணை, நீங்கள் பேசினதிலை ஒரு பிழையுமில்லை- இனி என்ன, கெஞ்சிறதா?'' —விவேயைப் பார்த்து, திரும்பவும் சச்சி சொன்னான்.

''எண்டாலும்-'' மெல்ல, ஆறுதலாகத் தொடங்கினான். சித்திரவேல். சேனாதிக்குப் பக்கத்து மேசை, எல்லாம் வடிவாகக் கேட்டுக் கொண்டிருந்தவன்.



''தெரியாதே ... இப்ப உள்ள நிலைமைகளிலை நாங்கள் கொஞ்சம் பணிஞ்சுதான் நடக்க வேண்டியிருக்கு''

## 3

வெள்ளைச் சல்லி பெறுத விஷயம் இப்படியாகி விட்டது, வேலையில் மனம் ஏவமாட்டேன் என்கிறது. அதுவும் முழுக்க கல்குலேஷன்கள்.

விசிறி சுழற்றிய காற்றின் வீச்சில், வரை பலகையுடன், பொருத்தியிருந்த 'கிளிப்' பை மீற முடியாமல் படத்து மூலை படபடத்தது. இந்தக் காற்றுப் பொல்லாதது — என்னதான் இறுக்கிப் பொருத்தியிருந்தாலும் படத்தாளை அசைத்து விடும். இம்மி அசைந்தாலும் நுணுக்கம் போச்சு — என்ன செய்வது ? புழுக்கந்தாள முடியாது. விசிறிக்கு றெகுலேற்றரும் இல்லை. 'ட்ராஃப்ரிங் மெஷி'னை அரக்கி, தாள் கிளம்பாமல் வைத்தேன்.

'என்னில் தான் பிழையா ?' இரண்டு நாளாக இதே யோசனை...

ஆனல், யோசிக்க யோசிக்க அப்படியில்லை என்று படுகிறது. நேற்றும் அப்படித்தான் பட்டது. சொல்லிமுடித்த அடுத்த கணங்கூட, ஒரு திருப்திதான் தெரிந்தது, சேனாதியும் சித்திரவேலும் தான் குழப்பி விட்டார்கள்......

பென்சிலை உருட்டிக் கொண்டிருந்தபோது, சித்திர வேலுவே வந்தான்.

''எப்பிடி விவே?...'' அவன் நேரே விஷயத்தில்இறங்கினான்.

'' ...நான், பிறகு,- நேற்றும் முந்தநாளும் - இந்த விஷயத்தை நல்லா யோசிச்சுப் பாத்தன்... நீர் சொன்னதிலை ஒரு பிழையுமில்லை எண்டுதான் படுகுது — சச்சிசொன்னதுபோல, இது கெஞ்சுகிற விசயமில்லைத்தான் ... ''

பெருத்த ஆறுதலாயிருந்தது.

சித்திரவேலு, சொல்லி விட்டுக் கொஞ்ச நேரம் மௌனமாயிருந்தான்.

''அப்ப இனி என்ன செய்யலாமெண்டு நினைக்கிறீர் ? '' - விவே கேட்டான்.

''இனியோ?... இத்தறுதிக்கு அடிச்சி முடிச்சிருப்பாங்களே ? ...''

'' இல்லை அச்சுக் கூடத்திலையிருந்து வாற வெள்ளிக்கிழமைதான் எடுக்கலாம் - இண்டைக்குத் திங்கள் தானே ... ''

''அப்ப நாங்கள் செயற்குழுவுக்கு ஒரு விண்ணப்பம் எழுதுவம் — அண்டைக்கு சும்மா வாய்ப் பேச்சிலை கதைத்ததைவிட, வேற ஒண்டுமில்லைத் தானே ? -''

''நீங்கள் எப்ப கேட்டநீங்கள் ? எண்டு பிறகு கேக்க இடம் வைக்கக் கூடாது ''

''அது நல்ல யோசனை தான் — ''

'' எழுதி, எல்லா அங்கத்தவர்களும் கையெழுத்து வைச்சுக் கொடுக்கலாம் .. ''

## 4

''அய்யா நீங்கள் என்ன வேலை செய்திருக்கிறீங்கள்?'' - மூர்த்தி கேட்ட விதத்தில் சிவஜோதி கொஞ்சம் பயந்து போய்விட்டார்.

''ஏன் என்ன? என்ன செய்தநான் ? ''

''பின்னை என்ன ? அந்த லெற்றர் ஹெட் 'திருப்தி' எண்டு கையெழுத்துப் போட்டுக் குடுத்திருக்கிறீங்களே - அதிலை ஒரு வரி தமிழிலையும் போட்டால் குறைஞ்சா போகும் ? ''

சிவஜோதி திடுக்கிடத்தான் செய்தார்.

''என்ன தம்பி, என்னதம்பி அதை ஆர் யோசிச்சது? ... அவன் உங்கட லயனல்தான் - கொண்டு வந்து, சரியா எண்டு கேட்டான். அந்த 'லே-அவுட்' அதுகளைப் பற்றிக் கேட்கிறுனுக்கும் எண்டு நான் நினைச்சேன் ... எடடே ... ''

''உங்கட கொமிற்றியிலை இதுகளைப் பற்றி ஒண்டுந் தீர்மானிக்க இல்லையா? ... ''

''ஒரு ஐந்நூறு 'லெற்றர் ஹெட்' அடிக்கிறது எண்டு தான் முடிவெடுத்ததொழிய, விபரம் ஒண்டும் தீர்மானிக்க இல்லை - தீர்மானிக்கிறதெண்டா, நாங்களும் மூண்டு பேர் இருக்கிறதமல்லே - நான், சேனாதி, மணியத்தார் —— ''

## 5

''மணியத்தார் வாறார்...'' என்றான், கன்டொஸ். சுருட்டுப்புகை முன்னால் வந்தது.

''தம்பியவை, இப்படி நீங்கள் மாத்திரம் தனித்தனிக் கூட்டமாக நிண்டு கதையாதையுங்கோடா ... மற்றவங்களுக்கு பார்க்க ஒரு மாதிரியாயிருக்கும் ... ''

(11ஆம் பக்கம் பார்க்க)

# ஆண்களுக்கு நிகர் ஆண்கள்தான் பெண்களுக்கு நிகர் பெண்கள்தான்





அர்த்தநாரீஸ்வரர்

20.5.1989 திசையில் தோழி பகுதியில் பெண்கள் இயல்பிலேயே பலவீனமானவர்களா? என்ற ஆய்வுரையை எழுதியவர் ஆணுதிக்கத்திற்கெதிராக உரிமையோடு குரல் கொடுத்தாலும் சில பலவீனமான கருத்துக்களையும் வெளிப்படுத்தியுள்ளார்.

'When we are putting right somebody's mistakes; it may happen that we are unfair ourselves.'

இது ஒரு ஆங்கிலப் பொன்மொழி.

உலகம் வெற்றிகரமாக இயங்குவதற்கு ஆண் பெண் இருவருமே கண்ணின் இருமணிகள் போன்றவர்கள். சிவன் இன்றி சக்தியில்லை. சக்தியின்றி சிவனில்லை. இதை வேதாகமங்களே வலியுறுத்துகின்றன. ஆண்களுக்கு நிகர் ஆண்கள்தான். பெண்களுக்கு நிகர் பெண்களே தான். இதில் ஆண்மை, பெண்மை என்ற வேறுபாடு இயற்கையாகவே அமைந்துள்ளது. இதன் அர்த்தம் ஆண்மைக்குப் பெண்மை அடிபணிய வேண்டும் என்பது அல்ல. ஆணுதிக்கத்திலிருந்து பெண் விடுதலை பெறுவதற்கு மேடைகளில் நின்று பிரச்சாரங்கள் புரிவதன் மூலமோ அல்லது பத்திரிகையில் எழுதுவதன் மூலமோ தகுதியடைந்து விடமாட்டோம். இன்று பெண்கள் எந்த நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்? பெண்கள் பெண்களாலேயே எவ்வளவு தூரத்திற்கு ஆளப்படுகிறார்கள், அடக்கப்படுகிறார்கள்? இந்த அடிப்படையில் முதலில் பார்ப்

**த. இந்து**

போமேயானல், பெண்ணுதிக்கத்தில் இருந்து பெண்கள் விடுதலை பெற்ருல் மட்டுமே உறுதியோடு ஆணுதிக்கத்திலிருந்து விடுபடமுடியும்; எதிர்த்துப் போர்க் கொடி தூக்கமுடியும். புராணங்கள், இதிகாசங்கள் ஆணிற்கும் பெண்ணிற்கும் பாரிய இடைவெளியை ஏற்படுத்தவில்லை. பெரும் பாலும் பெண்ணின் கற்பின்மகிமையை வர்ணித்துள்ளன.

சுவாமி விவேகானந்தர், மகாத்மாகாந்தி போன்ற அண்மைக்காலத்தில் வாழ்ந்த மகான்கள் பெண்களின் விமோசனத்திற்கும், விடுதலைக்கும் கூறிய அறிவுரைகளை இந்த நவநாகரீக நூற்ருண்டில் வாழும் கற்றுணர்ந்த பெண்களாலேயே புரிந்து கொள்ள முடியவில்லை.

விவேகானந்தர் இந்தியப் பெண்களின் நிலையை எண்ணி மனம் வருந்தினர். மகாத்மா காந்தி பெண்களுக்கு இப்படிக் கூறுகிறுர்; ஆங்கிலம் பேசும் பெண்கள் எல்லோரும் நாகரீகமானவர்கள் அல்லர். சீதை, கண்ணகி, நளாயினி, தமயந்தி போன்ற நாகரீக வாடையே வீசாத உயர்நிலை மாந்தர்கள் இந்தக் காலத்திற்கு அவசியமாகத் தேவைப்படுகின்றனர். இன்று பொறுப்பற்ற கல்விமுறையினுல் ஒழுக்க நடை இல்லாதிருக்கிறது. ஆண்கள் நடந்து கொள்ளும் முரட்டுத் தன்மையான நடத்தையினின்றும் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளப் பழகிக்கொள்ள வேண்டும். அதற்காக பெண்கள் கையில் கிடைக்கும் எரி பொருளையும் ஆயுதமாகப் பயன்படுத்தலாம். ஆனுல் தற்காலத்துப் பெண் பலதரப்பட்ட இளைஞர்களோடு வேடிக்கையாகப் பேசிப் பழகுவதில் அதிக விருப்பம் கொள்கிறுள். இதனுல் தொந்தரவையும், ஆபத்தையும் எதிர் கொள்ள வேண்டியிருக்கிறது. மழை, வெயில், காற்று இவற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு தற்காலத்துப் பெண்கள் உடையணிவதில்லை. பார்ப்போர் கவனத்தை தம்வசம் ஈர்ப்பதற்காகவே அவர்கள் ஆடையணிகிறுர்கள். முகத்தில் வர்ணம் அடித்தாற்போல் மாவைப் பூசிக்கொண்டும் மிக ஆடம்பரமான முறையில் தம்மை அலங்கரித்துக் கொண்டும் அழகைப் பெருக்குவதற்காகவே காலத்தைக் கழிக்கிறுர்கள். இம்மாதிரிப் பெண்களுக்கல்ல நான் சொன்ன அகிம்சாவழி. அத்தகைய அகிம்சா உணர்ச்சியை வளர்ப்பதற்கு சில திட்டமான நியதிகள் உண்டு. இம்முயற்சி, எண்ணம், வாழ்க்கை இரண்டிலுமே மாற்றத்தை உணடாகி விடுகிறது. அப்படி மாற்றி அமைத்துக் கொண்டால் சந்திக்க நேரும் இளைஞர்கள் தங்களுக்கு மரியாதை செலுத்தவும், தங்கள் முன்னிலையில் நேரிய முறையில் பழகவும் கற்றுக் கொள்வார்கள என்பதை அவர்கள் விரைவிலேயே காணலாம். ஆண்கள் முரட்டுத்தனமாகக் கேலி செய்தால் அதற்காகப் பெண்கள் மன அமைதியை இழந்தோ அல்லது அலட்சியமாகவோ இருக்கலாகாது. பொதுசனங்களுக்குத் தெரியும்படியாக இம்மாதிரியான நிகழ்ச்சிகளை பத்திரிகை — களில் வெளியிட வேண்டும். அப்படிக் கேவலமாக நடந்து கொள்பவர்களின் பெயர்கள் தெரிந்தால் வெளியிடவேண்டும். இத்தகைய கேட்டை வெளிப்படுத்துவதில் பொய்யான அடக்கம் கூடவே கூடாது. ஆண்கள் தங்கள் சகோதரிகள், தாய்மார்களுடைய மானத்தை எவ்வளவு பெரிதாக மதிக்கிறுர்கவோ அதேபோல் மற்றப் பெண்களின் மானத்தையும் மதிக்கவேண்டும். நல்ல முறையில் பழகத் தெரிந்திராவிட்டால் அவர்கள் கற்றகல்வியாவும்வீணுனதே. வருங்காலத் தந்தையர்கள் என்று பெருமை பாராட்டும் இளைஞர்களே! உணவிற்கு உப்பு அவசியம் போல தேசத்திற்கு நீங்கள் முக்கியமானவர்கள். உப்பு தன் உவர்ப்புத் தன்மையை இழந்தால் மறுபடி எதைக் கொண்டு உவர்ப்பூட்டுவது'!

'அடங்காத பெண் ஈனப் பிறவி; அவள் ஒதுக்கி வைக்கப்படுவாள்' என்ற கூற்றை நோக்கும் போது இது ஆணுதிக்கத்தின் பிடிக்கு அப்பாற்படுத்தி ஆராயப்பட வேண்டியதொன்ருகும். அடக்கம் பெண்களின் பெண்மைக்குப் பெருமை தருவது. இதைப் போராட்டச் சூழ்நிலையில் வாழும் தமிழ்ப் பெண்கள் கடைப்பிடிக்க வேண்டும். ஒரு நாட்டின் வளர்ச்சியோ அல்லது ஒரு நாட்டின் விடுதலைப் போராட்ட வரலாற்றின் சிறப்போ உயர்வடைவதும், தாழ்வடைவதும் அந்த நாட்டில் வாழும் ஒவ்வொரு குடும்பத்தில் உள்ள பெண்களின் கையில்தான் தங்கியுள்ளது. 'நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம்' என்று மிளிர்வதற்கு அந்தக் குடும்பத்தில் துயர கற்றுகிற திறன் பெண்களால் தான் முடியும். பெண்களுக்கு இயற்கையாகவே அமைந்த சகிப்புத்தன்மையால் கட்டுப்பாடான, சிறந்த சந்ததிகளைச் சமுதாயத்திற்கு வழங்கமுடியும். இன்று இளந்தலைமுறையினரின் தீய ஒழுக்கம், போதைப் பொருள் பாவனை போன்றவற்றிற்கான காரணிகளை ஆராயும் போது பெரும்பாலானவை பெற்ருேருக்கும் பிள்ளைகளுக்கும் இடைவெளி அதிகரித்து அன்புப் பிடியில்லாமல் போன விரக்தியின் எல்லையே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது. உயர்ந்த இளம் சந்ததியினரைப் பெருத நாடு எவ்வளவு செல்வத்தில் மிதந்தாலும் 'கணீர்' என்ற சிரிப்பின் பின்னணியில் 'கண்ணீர்' கதைகள் நிறைந்திருக்கும். எனவே பெண்களுக்கு அடக்கம் அவசியம். ஆனுல் அடக்குமுறைக்கு அடிபணிய வேண்டியதில்லை. ஆணுதிககத்தில் போடப்படும்தடைகளைத் தகர்த்தெறிவதற்கு பெண் சமுதாயம் விழிப்படைய வேண்டும். கற்றுயர்ந்த பெண்களால் எழுத்தறிவு கூட இல்லாத பெண்களுக்கு ஆணுதிக்கம் என்ருல் என்ன? பெண்ணடிமைத்தனம் என்ருல் என்ன? என்ற அடிப்படைக் கேள்விக்கு விடைகொடுத்து சமுதாயத்தைப் பற்றி அத்தகைய பெண்களின் பார்வையைத் தெளிவாக்க வேண்டும்.

பெண்களின் பலம், பலவீனம் போன்றதை சீர்தூக்கிப் பார்ப்பதற்கு பி. டி. உஷா, ஆர்த்தி பிரதான் என்ற பெண் வீராங்கனைகளின் சாதனைகளை பெருமையோடு ஏற்றுக்கொண்டால் மட்டும் எல்லாப் பெண்களையும் அந்த வரிசையில் நிரல்படுத்த முடியாது. இத்தகைய பெண்களால் பெண்ணின் பெருமை உலகில் கொடி கட்டிப் பறக்க, மறுபடியும் 'பமேலா போர்டஸ்' (Pamella Bordes) போன்றவர்களால் பெண்ணின் பெருமை காற்றில் பறக்கவில்லையா? அதற்காக எல்லாப் பெண்களையும் பமேலா போன்ற பெண்களின் வரிசையில் நிரல்படுத்த முடியாது. ஆனுல் இத்தகைய கேட்டை மட்டும் ஆணுதிக்கத்திற்கெதிராகக் குரல் கொடுப்பவர்கள் கண்டனக் குரல் எழுப்பத்தவறுவதேன்? பமேலா விவகாரத்தில் எந்தளவிற்கு ஆணுதிக்கம் பெண்ணுதிக்கத்திற்கு ஈடு கொடுக்க முடிந்தது?

அழகி பமேலாவின் தாயார் சகுந்தலா தேவி மிகவும் வேதனையோடு பின்வருமாறு கூறுகிறுர்; "இந்திய மண்காக்க, இந்தியாவின் பெருமையைக் காக்க, உயிர் நீத்த எனது கணவன், மகன், மருமகன் ஆகியோரின் தியாகங்கள் என்னுடைய மகளின் நடத்தையால் எல்லாமே வீணுகி விட்டது." இத்தகைய பெண்களால் குடும்பத்திற்கு மட்டுமல்ல, நாட்டிற்கே அபகீர்த்தி ஏற்பட்டது போன்ற சம்பவங்களை பெண்களே தாராளமாகக் கண்டிக்கவேண்டும். அப்பொழுதுதான் பெண்கள் யார் என்பதை ஆணுதிக்கம் உடையவர்கள் புரிந்து கொள்வார்கள்.

ஆணுதிக்கத்தால் பெண்கள் சுரண்டப்படுவதில் சீதனப் பிரச்சினையும் அடங்கும். நம் முன்னேர்கள் சமுதாயத்தின் கால்களில் கடின விலங்கை மாட்டி விட்டார்கள். நம் சமூகம் பயங்கரமானது அல்லது பேயாட்டம் போன்றது என்று ஒரு வார்த்தையிலேயே கூறிவிடலாம். வரதட்சணை ஒரு சமூக நோய் போல் பரவியுள்ளது. உதாரணமாக பல சகோதரிகளையுடைய ஒரு சகோதரன் வரதட்சணை வேண்டவேண்டும் என்ற நிலையில் பெற்ருேரால் நிர்ப்பந்திக்கப்படுகிறுன். இந்நிலையில் அவனது சொந்த விருப்பு வெறுப்புகளெல்லாம் இரண்டாம் தரத்திற்கே உரியது. அதே நேரம் எந்தவிதமான சகோதரிச் சுமைகளும் இல்லாத இளைஞனும் அவனது பெற்ருேரின் வரட்டுக் கௌரவத்திற்காக வரதட்சணை வாங்க நிர்ப்பந்திக்கப்படுகிறுன். அதிலும் பெண்களைப்பற்றி பெண்களே புரிந்து கொள்ளாத அளவிற்கு மாமியார் என்ற பெண்ணுதிக்க அந்தஸ்தில் இருந்து சீதனப் பேரம் பேசுவதில் பெண்களே உடும்புப் பிடியாக இருக்கின்றனர். இப்படியானவரதட்சணைக் கொடுமையில் ஆணுதிக்கத்திலும் பெண்ணுதிக்கமே மேலோங்கி நிற்கிறது.

பொருமை, போட்டி, சுயநலம் போன்றவற்ருல் பெண்களே பெண்களைப் பழிவாங்குகிறுர்கள். தங்களுக்குப் பிடிக்காதவர்களாயின் பாரதூரமான கட்டுக்கதைகளையெல்லாம் கிளப்பிவிடுகிறுர்கள். எந்தவிதமான நன்மையும் தராத, அர்த்தமற்ற பேச்சுகளிலேயே காலத்தைக்கடத்தும் இத்தகைய குணமுடையோரால் குடும்பமும் நல்ல முறையில் வழிநடத்தப்படுவதில்லை. சமுதாயமும் சீர்திருத்தமடையப் போவதில்லை. இளம் யுவதிகள் பொதுநலம், சமூக சேவை போன்றவற்றில் பங்கு கொண்டால் அவர்களை சந்தேக கண்ணேடு நோக்கித் தூற்றித் திரிவதில் பெண்களே எங்களது சமூகத்தில் முன்னணியில் நிற்பது வேதனைக்குரியது. சுதந்திர தத்துவத்தைப்பற்றி தெரியாமல் பாண்டித்தியத்தைக் காட்டிக் கற்பிக்கும் கல்வி முறையே இதற்குக் காரணமாகும்.

எனவே இன்று நமது சமூகம் ஆணுதிக்கம், பெண்ணுதிக்கம் ஆகிய இரண்டின் பிடியிலுமே அடிமைப்பட்டு கிடக்கிறது. சமூக கேடுகளையும், மற்றக் கொடுமைகளையும் எதிர்த்து நின்று போராடுவதற்கான வல்லமையை இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் அளிக்க கல்வி முறை தவறி விட்டது.

(11ஆம் பக்கம் பார்க்க)

# சார்க் அமைப்பு – அதன் பின்னணி

நாடுகளுக்கிடையேயான நல்லிணக்கத்தையும் பரஸ்பர பொருளாதார, அரசியல் ரீதியான உதவிகளையும் ஏற்படுத்திக் கொள்ளும் முகமாக பல அமைப்புகள் உருவாக்கப்படுகின்றன. இவற்றுள் இன்று பிரபல்யம் மிக்கதாக உள்ள நேட்டோ, வோர்சோ போன்ற அமைப்புகளை உதாரணமாக நாம் காட்டலாம். இவைமேற்கத்தைய நாடுகளின் அரசியல், பொருளாதார ராஜதந்திர உறவுகளின் வடிகால்களாக நிற்கின்றன. அவ்வாறே அண்மையில் தென்னசிய பிராந்திய நாடுகளிடையே உருவாக்கப்பட்டுள்ள ஏசியன் சார்க் போன்ற அமைப்புகளும் உள்ளன. இவற்றுள் ஆகப்பிந்தியதாக 1985 இல் அமைக்கப்பட்டதே சார்க் அமைப்பாகும்.

சார்க் சபையின் உருவாக்கத்துக்கான அவசியம் ஏன் ஏற்பட்டது? அதன் மூலம் அதன் அங்கத்துவ நாடுகள் எதை எதைப்பெற முனைந்தன என்பன தவிர்க்க முடியாத கேள்விகளாகும்.

சார்க் (SARRC) என்பது தென்னசியப் பிராந்திய ஒத்துழைப்புக்கான அமைம்பு என்பதன் சுருக்கமாகும்.

இந்த அமைப்பை உருவாக்குவதற்கு, இந்தியாவை மையமாகக்கொண்டு, அதனை சுற்றியுள்ள பங்களாதேஷ், நேபாளம், மாலைதீவு, பூட்டான், இலங்கை, பாகிஸ்தான் போன்ற சிறிய நாடுகளே – குறிப்பாக பங்களாதேஷ் – முயற்சி எடுத்துக் கொண்டன. இந்த அமைப்பை உருவாக்குவதற்குரிய அவசியம் ஏன் ஏற்பட்டது? அதன்பதிலில் அதன் பின்னணி நமக்குச் சிறிதுதெளிவாகலாம்.

வட வியட்நாமில் கொம்யூனிஸ்ட்டுகளின் ஆதிக்கமும் வெற்றியும் அதைச் சூழவுள்ள நாடுகளான இந்தோனேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, பிலிபைன்ஸ், மலேசியா போன்ற நாடுகளை அச்சுறுத்தியதன் விளைவே, ஏசியன் (ASEAN) அமைப்பின் தோற்றமாகும். கொம்யூனிஸ ஆதிக்கத்துக்கெதிரான தடுப்பு நடவடிக்கையே அதன் மூலகாரணமாக இருந்துள்ளது.

இதே வீச்சில் சார்க் அமைப்பின் தோற்றத்தை மேலெழுந்தவாரியாக நோக்கும் போது, இந்தியாவென்னும் ஓர் வலிய சக்தியால் தாம் விழுங்கப்படப் போகிறோம் என்ற ஓர் அடியோடிய பீதியே, (அத்தகைய நிகழ்வை முற்கூட்டியே தடுக்கும் வழியாக) சார்க் அமைப்பை தோற்றுவித்திருக்கலாம் என அரசியல் அறிஞர்களால் கருதப்படுகிறது. இதன் காரணத்தால்தான் இத்தகைய அமைப்பின் உருவாக்கம் பற்றி ஆரம்பத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட போது இந்திய அரசு இது பற்றி நீண்ட மௌனமான தெளிவான விளக்கத்தையும் ஆய்வையும் தனக்குள் மேற்கொண்டது.

இறுதியில் எந்தவித அரசியல் கலப்பும் அற்ற, இருநாடுகளுக்கிடையிலான ஒப்பந்தங்கள் உடன்படிக்கைகள் பற்றிய விவாதங்கள் அனுமதிக்கப்படாத ஓர் அமைப்பாக சார்க் உருக்கொள்வதற்கு இந்தியா உடன்பட்டது. ஆகவே அரசியல் புறந்தள்ளப்பட்ட இவ்வமைப்பு, நாடுகளுக்கிடையேயான சமூக பொருளாதார, கலாசார ரீதியான அபிவிருத்திக்குச் சந்தர்ப்பம் அளிக்கும் ஓர் அமைப்பாகவே இயங்கும் வாய்ப்பைப் பெற்றது. இந்த வகையில் இது அரசியல் ரீதியான ஓர் இணைப்பை மேற்கொண்டு உந்தப்பட்ட ஏசியன் அமைப்பில் இருந்து குறுக்கமும் வித்தியாசமும் கொண்டதென்றும் கூறலாம்.

இதன் அரசியல் குறுக்கமே இந்த அமைப்பின் பின்னால் நிகழ்ந்துள்ள விளைவுகளுக்கும் தற்போது இது எதிர்நோக்கியுள்ள பிரச்சனைகளுக்கும் காரணமாய் உள்ளது. இதையே பங்களாதேஷ் ஜனாதிபதி ஏர்ஷாட், டாக்காவில் நடைபெற்ற சார்க் மாநாட்டின் போது மறைமுகமாகக் கூறினார்; அதாவது "சரித்திர, அரசியல் ரீதியாக எமக்குமுன் உள்ள தடைகளை நாம் மறுப்பதென்பது யதார்த்தத்துக்கு மாறானதாகும்". என்றார். இதையே முன்னைய இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர்., "நமது எல்லா நாடுகளையும் ஒன்றாகச் சேர்த்தாலும் இந்தியாவின் அளவை மிஞ்ச முடியாது. ஆகவே நாம் ஒருவரை ஒருவர் நம்பியே இதில் ஈடுபட வேண்டும்". என்று வேறுவிதமாகத் தனது அச்சத்தைத் தெரிவித்தார்.

இதன் பின்னணியிலேயே, சார்க் அமைப்பு ஆரம்பிக்கப்பட்டபோது அதன் முன்னேற்றம் பற்றி ஐயம் கொண்ட அரசியல் அவதானிகள், அதற்குத் தடையாக அமையக் கூடும் என முன்வைத்த நான்கு காரணிகளை நாம் நோக்க வேண்டும்.

முதலாவது, சார்க் அமைப்பில் பங்கு கொண்டுள்ள சகல நாடுகளும் காலனித்துவ ஆதிக்கத்துக்கு உட்பட்டு சுரண்டப்பட்டவை. அதனால் அவையிடையே அயல் நாடுகளின் ஆதிக்கம்பற்றிய சரித்திர ரீதியான பயம்.

**உருளும் உலகில்**

**சி. சண்முகவடிவேல்**

இரண்டாவது, இந்தியாவின் அமைப்பளவுக்கும் சக்திக்கும் அதனோடு சம்பந்தமுடைய ஏனைய நாடுகளின் அமைப்பளவுக்கும் சக்திக்கும் இடையே உள்ள பெரிய வித்தியாசம். எப்பொழுதும் இந்த வித்தியாசம் தவிர்க்கமுடியாத வகையில் ஏனைய சிறிய நாடுகளை சந்தேகக் கண்கொண்டே இந்தியாவைப் பார்க்கவைக்கும்.

மூன்றாவது, இந்தியாவென்னும் "பெரிய அண்ணாவின்" சுரண்டல் பற்றிய பீதியைத் துரும்பாகக் கொண்டு ஏனைய பெரும் பிராந்திய நாடுகளின் தலையிடல் ஏற்பட வழிவகுத்தல்.

நான்காவது தென் ஆசியப் பிராந்திய நாடுகளுக்கிடையே காணப்படும் போதிய உள்ளார்ந்த ஐக்கியமின்மை.

இன்று சார்க் அமைப்புக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியினைக் கொண்டு பார்க்கும்போது இவற்றின் தீர்க்க தரிசனம் நன்கு புலப்படும்.

இதைவிட முக்கியமானது சார்க் அமைப்பின் அடிப்படைப்பலவீனமான அரசியல் கலவாமை. இன்றைய உலகப் போக்கில் சகல இயக்கங்களுமே அரசியல் மயமாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் போது, "அரசியல் கலவாத" அமைப்பென்பது ஒரு போலியே.

அரசியல் கலவாத 'கற்பைப்' பேணுவதாக ஒப்புக் கொண்டு சார்க் அமைப்மை உருவாக்கிய தென்னசிய பிராந்திய நாடுகள் இன்று அரசியல் காரணங்களைக் காட்டியே சார்க் அமைப்பை பகிஷ்கரிக்கவும் கண்டிக்கவும் தொடங்கியுள்ளது எதைக்காட்டுகிறது? இலங்கை இன்று சார்க் மாநாட்டை பகிஷ்கரிக்க முனைப்புக் கொண்டது — அதன் சரிபிழைபற்றி இங்கு பேசுவது அனாவசியம் — எதன் விளைவு என்பது விளக்கப்படத் தேவையற்ற ஒன்றாகும். □

## சிறுகதைப் போட்டி முடிவுகள்

திசையின் சிறுகதைப் போட்டிக்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது. எல்லாமாக 95 சிறுகதைகள் போட்டிக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

பழைய எழுத்தாளர்களும் புதிய எழுத்தாளர்களும் கலந்துகொண்டனர். யாழ்ப்பாணத்திலிருந்தும் வெளி மாவட்டங்களிலிருந்தும் மட்டுமல்லாது மேற்கு ஜேர்மனியிலிருந்தும் இவர்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர்.

திசை ஆசிரியர் குழுவினால் மொத்தக் கதைகளும் முதலில் பரிசீலிக்கப்பட்டு 20 கதைகள் இறுதிப் பரிசீலனைக்குத் தெரிவுசெய்யப்பட்டன.

இறுதிப் பரிசீலனையில் விமர்சகர் சித்திரலேகா மௌனகுரு, எழுத்தாளர் க. சட்டநாதன், திசை ஆசிரியர் மு. பொன்னம்பலம் ஆகியோரைக்கொண்ட நடுவர் குழு அக் கதைகளைக் கவனமாகப் பரிசீலனைசெய்து, முதல் மூன்று பரிசுக் கதைகளையும் ஆறுதற் பரிசுக்குரிய ஏனைய ஐந்து கதைகளையும் தேர்வு செய்தனர்.

இப்போட்டிக்குப் பல்வேறு வழிகளிலும் ஒத்துழைத்த அனைவருக்கும் எமது நன்றிகள்.

— ஆசிரியர் □

முதற் பரிசு 750 ரூபா : 'கோணறு பதிகம்'
ரஞ்சகுமார்
கயலகம், மத்தொனி,
கரவெட்டி.

இரண்டாம் பரிசு 500 ரூபா : 'மையித்துக்கள் துயில்கின்றன'
கலைவாதி கலீல்
45, ஹுசைனியா வீதி,
கொழும்பு–12.

மூன்றும் பரிசு 250 ரூபா : 'முதுகச் சொறியுங்கோ'
அல் அஸுமத்
120, லங்கா மாதா மாவத்த
மஹபாகே, ராகம.

ஆறுதல் பரிசுகள் 100 ரூபா வீதம்

1. 'நான் – வட்டச்சுவருள் முட்டும் குருடன்'
   இரிஷி ப்ரபஞ்ஷன்
   க. இரமணீதரன், 61, வித்தியாலய வீதி,
   திருகோணமலை.
2. 'பூட்டில்லாப் பூட்டு'
   ந. பார்த்தியன்
   உதவி ஆசிரியர், ரஜவெல தமிழ் மகா வித்தியாலயம்,
   கண்டி.
3. 'அதே விதியெனில்'
   ஐ. சாந்தன்
   அண்ணாமலை வீதி, சுதுமலை, மானிப்பாய்.
4. 'மனிதனைத் தேடி'
   G. P. வேதநாயகம்
   16, மருதடி வீதி, யாழ்ப்பாணம்.
5. 'முகத்திரை'
   P. சிவனேசன்
   மே/பா. பொ. செல்லம்மா, சைவப் பாடசாலை வீதி,
   கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

பரிசளிப்பு பற்றிய விபரங்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக அறிவிக்கப்படும். பரிசுக்கதைகளும், தகுதியான ஏனைய கதைகளும் திசையில் தொடர்ந்து வெளியிடப்படும் □

## 'பஸ்ரில்' சிறையின் திறப்பு

பிரெஞ்சுப் புரட்சியின் 200 வது நிறைவு தினம் பரிஸில் கொண்டாடப்படவுள்ளது. பிரெஞ்சுப் புரட்சியின் வெற்றிக்கு, ஏற்கனவே இங்கிலாந்திடமிருந்து விடுதலை பெற்றிருந்த அமெரிக்கா பெரிதும் உதவியுள்ளது என்பது வரலாற்று உண்மையாகும். இவ்வுதவிக்கு நன்றி தெரிவித்து கௌரவிக்கும் முகமாக பிரெஞ்சுப் புரட்சியின் போது உடைக்கப்பட்ட பஸ்ரில் சிறையின் திறப்பு அன்றைய அமெரிக்க ஜனாதிபதியாய் இருந்த ஜோர்ஜ் வோஷிங்ரனுக்கு பிரெஞ்சுப்புரட்சியாளர்களால் கையளிக்கப்பட்டது. அது அன்றிலிருந்து வோஷிங்ரன் நூதனசாலையில் காட்சிக்காக வைக்கப்பட்டிருந்தது.

எதிர்வரும் பிரெஞ்சுப் புரட்சியின் 200வது நிறைவு தினக் கொண்டாட்டத்தின் போது, இத்திறப்பு ஜனாதிபதி புஷ்ஷினால் பிரான்சின் ஜனாதிபதி மித்ரான்ட்டிடம் கையளிக்கப்படும். இத்திறப்பு பஸ்ரில் சிறையில் ஜூலை 22ஆம் திகதி வரை பார்வைக்கு வைக்கப்பட்டுப் பின்னர் அமெரிக்காவுக்குதிருப்பிக் கொடுக்கப்படும்.

மேற்படி வைபவத்துக்கு கொம்யூனிஸ்ற் நாடுகளைத் தவிர்ந்த ஏனைய 30 நாடுகள் அழைக்கப்பட்டுள்ளன. □

## உலகிலேயேபெரிய பணக்காரர்கள் யப்பானில் !

உலகிலுள்ள பெரும் 10 பணக்காரருள் 6 பேர் யப்பானைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவருகிறது. ஆனால் ஆகக் கூடுதலான கோடீஸ்வரர்கள் அமெரிக்காவிலேயே உள்ளனர் என்றும் தகவல்தரப்படுகிறது.

உலகக் கோடீஸ்வரர்களுள் யப்பானிலுள்ள முன்னைய பொருளியல் பேராசிரியரான ரய்சிச்சிரோ மொறியும் ஒருவராவர் இவருக்கு மட்டும் ரோக்கியோவிலுள்ள 72 அலுவலகக் கட்டிடங்கள் சொந்தமாகவுள்ளனவாம். இவருடைய மொத்தச் செல்வ மதிப்பீடு 14. 2 பில்லியன் டொலராகும்.

## இந்தியாவின்...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாக இந்தச் சிறுபான்மையினர் இனரீதியாக இந்தியாவின் சில பகுதியினரோடு தொடர்புடையவராக இருப்பதும் ஒரு காரணம்.

மூன்றாவது, இந்தியாவின் கரையோரப் பிராந்தியங்களைச் சுற்றியுள்ள நாடுகளில் பகைமைச் சக்திகள் இல்லாமல் இருப்பதைப் பார்த்துக் கொள்ளல்.

இந்தநோக்கில் எல்.ரி.ரி.ஈ.யினரிடமிருந்து ஆயுதங்கள் களையப்படாது, அவர்களை வடகிழக்கில் அதிகாரத்தோடு விட்டுச்செல்லல் இந்தியாவுக்கு ஆபத்தானது என்றே அது கருதுவதாக, மனோஜ் ஜோஷி கூறுகிறார். □

## மேற்கு நாடு...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் வந்த அதேவடிவில் சுவடுகள் நவம்பர் '88 இதழில் சேர்க்கப்பட்டுள்ளது. ஆனல் அக்கதையின் மூலம் பற்றிய எந்தக் குறிப்பும் இல்லை. இதே இதழில் வெளியான சேரனின் எரிந்து கொண்டிருக்கும் நேரம் கவிதையும் ஏற்கனவே பிரசுரமானதே. இது எங்கிருந்து பெறப்பட்டது என்ற குறிப்பும் இல்லை. பார்வை செப்டம்பர், ஒக்டோபர் '88 இதழ்களில் எம். ஏ. நுஃமானின் 'தமிழ் சினிமா' என்ற கட்டுரை இடம்பெற்றுள்ளது. இது அவரது திறனாய்வுக் கட்டுரைகள் (1985) என்ற நூலில் உள்ள கட்டுரையாகும். ஆனல் பார்வையில் அதுபற்றிய எதுவித தகவலுமில்லை. அத்துடன் திறனாய்வுக் கட்டுரைகள் தொகுப்பில் 'தமிழ் சினிமாவும் இலங்கையில் அதன் செல்வாக்கும்' என்பதே கட்டுரையின் தலைப்பு. ஆனல் பார்வையில் தமிழ்ச் சினிமா என்று மாத்திரமே உள்ளது. இத்தகைய குறைபாடுகள் தவிர்க்கப்படல் வேண்டும்.

### செய்யப்பட வேண்டியவை

மேற்கு நாடுகளிலிருந்து தற்போது வெளியாகும் சஞ்சிகைகள், தத்தமது நாட்டு மொழிகளின் இலக்கிய முயற்சிகள், புதிய விருத்திகள் குறித்து சிறிய அளவிலாவது தமிழ் வாசகர்கட்கு அறிமுகம் செய்ய முயலுதல் வேண்டும். ஏனைய கலைமுயற்சிகள் பற்றிய தகவல்களையும் சேர்த்துக் கொள்ளலாம். இது உலகின் பொது ஓட்டம் பற்றிய அறிவை வளர்ப்பதாகும். பிரபல ஓவியங்கள், சிற்பங்களின் புகைப்படங்களைச் சேர்ப்பது மூலமும் கவிதை மொழிபெயர்ப்புகள், நூல் அறிமுகங்கள் பேட்டிகள் போன்றவை மூலமும் இதனைச் செய்யலாம். உதாரணமாக புதுமை (ஏப்ரில்—ஜுன் 1988)இதழில் இந்நூற்றாண்டின் பிரபல ஓவியர் பிக்காஸோ வின் மிகமுக்கியமான சுவரோவியம் குவர்ணிக்கா. (1937) வின் சிறியளவிலான பிரதி இடம்பெற்றுள்ளது; வரவேற்கத்தக்க முயற்சி. ஆனல் அந்த ஓவியம்பற்றிய அடிப்படைக் குறிப்புகள் சிலவற்றைச் சேர்த்திருப்பின் மேலும் சிறப்பாக இருந்திருக்கும். (இத்தொடர்பில் பிரான்ஸிலிருந்து கலாமோகன் என்பவர் அங்கு நடக்கும் கலை இலக்கிய முயற்சிகள் பற்றி வீரகேசரியில் அடிக்கடி எழுதுவதைக் குறிப்பிடலாம்) இத்தகைய முயற்சிகளில் திட்டமிட்டும் உணர்வு பூர்வமாகவும் இச் சஞ்சிகைகள் ஈடுபட வேண்டும்.

மேற்கு நாடுகளில் தமிழர் சமூகம் ஒன்று தவிர்க்க முடியாதபடி இன்று உருவாகிக் கொண்டிருக்கிறது. மேற்குலகின் அபிவிருத்தியையும், வளர்ச்சியையும், முற்போக்கான அம்சங்களையும் முடியுமானவரை உள்வாங்கும் சாத்தியத்தை இச் சமூகம் வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும். ஆனல் இதனை எவரும் பெரிய அளவில் உணர்ந்ததாய்த் தெரியவில்லை. மேற்குலகின் முன்னேற்றகரமான பௌதீகரீதியிலான வசதிகளை (material comforts) முடியுமானவரை அனுபவித்துக் கொண்டிருந்தபோதும் இத் தமிழர் சமூகம் வேறு விடயங்களில் மூடிய மனப்போக்கையும் வைதீகப் பெறுமானங்களையுமே பேணுகின்றது. கலை, இலக்கிய விடயங்களில் ஆழ்ந்த தேடுதலின்மை இதன் ஒரு வெளிப்பாடாகும். சென்ற வருடம் நான் பாரீஸ் நகரத்திற்குச் சென்றிருந்தேன். அங்கு பிக்காஸோவின் ஓவியக் காட்சிச் சாலையையும் அகஸ்தே றொடினுடைய சிற்பக் காட்சிச் சாலையையும் பார்ப்பது எனது முக்கிய நோக்கமானது. நான் சந்தித்த பல தமிழ் நண்பர்கள் நீண்டகாலமாய் பாரிஸில் வசிப்பவர்கள்; பிரெஞ்சு மொழி அறிந்தவர்கள்; கணிசமான பொருளாதார வசதி படைத்தோர்; கலை இலக்கிய ஆர்வலர்களும் கூட. ஆனல் ஓவியச் சாலையும் சிற்பக்கூடமும் அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. இத்தனைக்கும் பிக்காஸோ ஓவியக் காட்சிச் சாலைக்கு அனுமதி இலவசம்! றொடின் காட்சிச் சாலைக்கோ 15 பிராங்குகள்! (ரூபாய் 75/=)

கலைத்தேட்டங்களில் எமது அக்கறையின்மையின் ஒரு அடையாளமாகத்தான் இது எனக்குத் தென்பட்டது. இந் நிலை மாறுதல் வேண்டும். "சென்றிடுவீர் எட்டுத்திக்கும், கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!" எனப் பாடினன் பாரதி. கொணர்ந்திங்கு சேர்க்கும் நிலை எமக்கில்லை. ஆனல் அவை பற்றிய அறிவையாவது உள்வாங்கும் ஆர்வம் எமக்கு ஏற்பட்டாலே போதுமானது. இந்தக் கைங்கர்யத்தை தமிழரிடம் ஏற்படுத்த இச் சஞ்சிகைகள் சிறிய அளவிலாவது முயலுதல் வேண்டும் என்பதே, எனது பேரவா ஆகும். □

## கிருஷ்ணன்...

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

"அதுக்கு என்னய்யா செய்யிறது?" என்றுன், சச்சி.

"இனிமேல் ஒரு பிரச்சினையுமிராது. அடுத்த முறையிலையிருந்து, தனிய இங்லீஷிலை தான் அடிக்கிறது எண்டு நாங்கள் தீர்மானிக்கப் போகிறம் ......"

— சுப்பிரமணியம் ஆங்கிலத்தில் சொன்னர்.

விவேக்குக்குப் பற்றிக் கொண்டு வந்தது.

"அய்யா, அவங்களிலை சில பேர் நினைக்கிற மாதிரித்தான் நீங்களும் நினைக்கிறீங்கள்– சிங்களத்தில் போட்டது எங்களுக்குப் பிடிக்கேல்லை எண்டு! பிரச்சினை அதில்லை! தமிழிலை போடாமல் விட்டதுதான் எங்கட பிரச்சினை! நீங்கள் தனிய இங்லீஷிலை அடிக்க வெளிக்கிட்டா, அதை எதிர்க்கிற முதல் ஆளாக நானிருப்பன் ... இப்ப பாதிப் பேருக்கு உள்ள நட்டத்தை நீங்கள் முழுப்பேருக்கும் கொண்டு வாறன் எண்டு நிக்கிறியள்..."

**6**

றெபட்டைப் பற்றி விவேக்கு நல்ல அபிப்பிராயம் இருந்தது. பியோன் வேலைக்கு வந்து சேர்ந்தாலும், படித்தவன், அறிவானவன் என்று. அவனுடைய தொழிற்சங்கத்தில் தமிழர்களும் கனபேர் அங்கத்தவர்களாயிருக்கிருர்களாம். அவனோடு ஒருதரம் தனியாகக் கதைத்துப்பார்க்கவேண்டுமென்றிருந்தது. றெபட், நலன் செய் சங்கத்திலும் செயற்குழு உறுப்பினன்.

சாப்பிட வெளிக்கிட்டுப் போனபோது, றெபட் யாருடனே பேசிக்கொண்டு நின்றுன். அவ்வளவு ஸீரியஸான பேச்சாகத் தெரியவில்லை. கிட்டப் போனதும்,

"றெபட், வேலையா? ......"
என்று மெல்லக் கேட்டான்.

"இல்லை ஏன்?"

"ஒரு சின்னக் கதை..."
தள்ளிப் போனுர்கள்.

"இந்த விஷயம் என்ன, குழப்பமாய்ப் போச்சு– றெபட் என்ன நினைக்கிறீர்?"

அவன் கொஞ்சம் அசட்டுத்தனம் தெரியச் சிரித்தான். பிறகு சொன்னன்;

"இடந்தான் பிரச்சினையாம், மூண்டு பாஷையிலும் போட, அரைவாசி இடம் போயிடுமே"

"ஏன் மூண்டு? – இங்லீஷை விடலாமே? ..."

"அதெப்படி? கொம்பனிகளுக்கு ..."

(தொடரும்)

## ஆக்க இசைக்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவற்றுக்கும் மேலாக கண்ணன் தீவிரமான ஒரு வாசகன்; சங்கீதம் முதற் கொண்டு விஞ்ஞானம் ஈறுக வாசிப்பவர்; பல்துறைசார் அறிஞர்களுடனும் நெருக்கமான தொடர்பு வைத்திருப்பவர்.

சாதாரண இசை ரசிகனை போதிலும் தமிழக இசையமைப்பாளர் எம். பி. ஸ்ரீநிவாசனும், ஈழத்துக் கண்ணனும் அவர்களது ஆக்கத்திறனிலும் ஆற்றிய பணியிலும் எனக்கு வேறுபட்டுத் தெரிவதில்லை. இவ்விரு ஆக்க இசைக்கலைஞர்கள் பற்றியும் காத்திரமான ஆய்வுகள் வெளிவராமை பெருங்குறைபாடாகும். கண்ணனது ஆக்கத்திறன் இன்னும் முழுமையாக வெளிப்படுத்தப்படவில்லை யென்பது எனது அபிப்பிராயம்.

குற்றத்தை எவருக்கும் பங்கிடடுக் கொடுப்பதல்ல எனது நோக்கம்; ஆற்றப்படவேண்டிய பணிகள் ஆற்றப்படாமலிருப்பதே, எனது ஆதங்கத்திற்குக் காரணம். ஈழத்தில் இசைத்துறைக்கு மட்டுமல்ல விஞ்ஞானம் தொழில் நுட்பமுட்பட சகல துறைகளுக்கும் இது பொருந்தும். சரியான கணிப்பீடுகளை வெளிக்கொணர பொருத்தமானவர்கள் முன் வர வேண்டுமென்பதே இன்றைய தேவையாகவுள்ளது. □

## ஆண்களுக்கு...

(9 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர்கள், பெண்கள் ஆகியோரின் மனப்பான்மையை புரட்சிகரமாக மாற்றக் கூடிய இயல்பாயமைந்த கல்வியைப் போதித்தால்தான் இவையாவும் சாத்தியமாகும். மணம் செய்வதற்கு பணம் தர வேண்டும் என்று கேட்கிற இளைஞனை மணக்க, பெண் மறுத்து விட வேண்டும். தன்னை மணக்க அவன் விதிக்கும் இழிவான நிபந்தனைகளுக்கு உட்பட்டு வாழ்வதை விட ஆயுள் காலம் முழுவதும் கன்னியாய் இருந்து காலம் கழிக்கப் பெண்கள் மன உறுதி கொள்ள வேண்டும். இவ்விதமான மன உறுதியும் மறுப்பு உணர்ச்சியும் ஏற்படும் வகையில் பெண்களுக்குப் பெற்றோர் கல்வி அளித்து, அவர்களது சொந்தக் காலிலேயே நின்று உழைப்பதற்கு சமூகத்தில் அவர்களை உயர்த்திவிட வேண்டும். ஆண்மைக்குப் பெண்மையும் சரிநிகரானதே. நிரூபியுங்கள்.

'திடமே கொண்டோம்
உறுதி நாமே இறுதியில்
காண்போம் விடிவு
தானே'. □

## நிகழ்வுகள்

### 4-7-89 செவ்வாய்

காலை 7 மணி முதல் கிளிநொச்சியில் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. பன்னங்கண்டி தமிழ்க் கலவன் பாடசாலை மீது ஷெல் விழுந்து வெடித்ததில் ஆசிரியர் ஒருவர் பலியானர். அதிபரும் வேறு இரு மாணவர்களும் படுகாயமடைந்தனர் □ ஊழியர்கள் எவரும் வேலைக்குச் செல்லாதிருந்த நிலையில் அங்கொடை, முல்லேரியா ஆஸ்பத்திரிகளிலிருந்து 300க்கும் அதிகமான மனநோயாளர் தப்பியோடினர் □ அமைதிப்படை தற்போது மேற்கொண்டுள்ள நடவடிக்கையை மு. கருணநிதி கண்டித்தார் □ யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீட மாணவர் மொருயசை விடுதலை செய்யும்படி கோரி, கலைப்பீட மாணவர்கள் இன்றும் விரிவுரைகளைப் பகிஷ்கரித்தனர் □ 200க்கு மேற்பட்ட தபால் பொதிகள் வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப்பட்டன □ வெவ்வேறு தாக்குதல்களில் 10 பொலிசார் தென்னிலங்கையில் பலியாகினர் □ மாணவர்களின் பாதுகாப்பை உத்தரவாதம் செய்யும்படிகோரி, மட்டக்களப்பிலும் மாணவர்கள் பாடசாலைகளைப் பகிஷ்கரித்தனர் □

### 5-7-89 புதன்

கொழும்பு ஹவ்லொக் ரவுணில் பொலிஸ் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர் □ பத்திரிகைத் தணிக்கையை அமுல் செய்வதாக அரசு அறிவித்தது □ 'இந்தியா தோற்கடிக்கப்படமுடியாத சக்தியல்ல; அதைத் தோற்கடிக்க மக்கள் அணிதிரள வேண்டும்' என ஜே. வி. பியின் இரகசிய வானொலியில் விஜேவீர கூறினர் □ நெல்லியடித் தாக்குதலில் மரணமான மில்லரின் இரண்டாவது வருட நினைவாக, வடமராட்சிப் பகுதியில் அஞ்சலி நிகழ்ச்சிகள் நடைபெற்றன □ கொழும்புத்துறைமுகத்தில் சரக்குகளை இறக்கும் வேலையில் கடற்படையினர் ஈடுபடுத்தப்பட்டனர் □ யாழ். நகரின் பல பகுதிகளிலுமிருந்து இளைஞர்கள் பலர் கூட்டிச் செல்லப்பட்டனர் □ யாழ்ப்பாணம் கே. கே. எஸ் வீதியில் மினிபஸ் விபத்தில் 8 பேர் காயமடைந்தனர் □

### 6-7-89 வியாழன்

மக்கள் தொண்டர்படைக்கு ஆட்சேர்க்கும் அதிகாரம் பிரதிப் பொலிஸ் மாஅதிபருக்குத்தான் உண்டு; மாகாணசபைகளுக்கு இன்னும் அந்த அதிகாரம் வழங்கப்படவில்லையென அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார் □ தற்போதைய நெருக்கடிக்கு முகங்கொடுக்க தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்வதென அரசு முடிவெடுத்தது □ அமைதிப்படை விவகாரத்தில் விட்டுக் கொடுக்க இடம் இல்லையெனவும், இந்தியா பேச விரும்பினல் பிரதிநிதி ஒருவரை அனுப்பிவைக்கட்டும் என்றும் இலங்கையரசு, அறிவித்தது □ அமைதிப்படை இங்கு இருக்கும் வரை சார்க் அமைப்பின் கூட்டங்களில் இலங்கை கலந்து கொள்ளாதென வெளிவ்வகார அமைச்சர் தெரிவித்தார் □

### 7-7-89 வெள்ளி

இலங்கையரைப் பாதுகாக்கும் பொறுப்பு இலங்கை அரசைச் சார்ந்தது என, இந்தியப் பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில் ஜனதிபதி தெரிவித்துள்ளார் □ ஈரோஸ் பிரமுகர்கள் ஜனதிபதியைச் சந்தித்து முக்கிய விடயங்கள் குறித்து உரையாடினர் □ தமிழீழப் பிரகடனத்தை யாராவது செய்தால் அவர் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின நாடாளுமன்றத்தில் தெரிவித்தார் □ ஜனதிபதி தலைமையிலான அரசாங்கம் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்போவதாக சிறிமாவோ பண்டாரநாயக்கா அறிவித்தார் □

### 8-7-89 சனி

ஈழவர் ஜனநாயக முன்னணியின் 13 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது பகிஷ்கரிப்பைக் கைவிட்டு, எதிர் வரும் 20 ஆம் திகதி நாடாளுமன்றம் செல்வதென்ற முடிவு கொழும்பில் வெளியிடப்பட்டது □ நல்லூரில் காலை மோதல் சம்பவமொன்று நடைபெற்றது. இதில் இரண்டு இளைஞர்கள் பலியாகினர் □ இந்தியாவுடனன ராஜதந்திர உறவைத் துண்டிக்கும்படி தேசபக்த ஐக்கிய முற்போக்கு முன்னணித் தலைவர் எஸ். டி. பண்டாரநாயக்கா கோரியுள்ளார் □ இலங்கையில் யாழ். மாவட்டத்திலேயே கர்ப்பிணித்தாய்மாரின் மரணவீதம் அதிகமெனச் செய்தி வெளியாகியது □ நடிகமணி வி. வி. வைரமுத்து கொழும்பில் காலமானர் □

### 9-7-89 ஞாயிறு

கல்முனையில் சில அசம்பாவிதங்களைத் தொடர்ந்து பதற்றம் நிலவியது □ அனைத்து இயக்கங்களையும் ஒன்றிணையும்படி, அறிக்கை யொன்றில் ஈ. என். டி. எல். எவ். கோரியது □ எதிரணிகள் ஒன்றிணைந்து 'பொது முன்னணி' அமைக்கும் முயற்சி வெற்றி அளித்திருப்பதாகக் கொழும்பில் தெரிவிக்கப்பட்டது □ ராஜீவ் காந்தியும் ஜனதிபதி பிரேமதாஸவும் எழுதிக் கொண்ட கடிதங்கள் இலங்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதை இந்தியா கண்டித்தது □

### 10-7-89 திங்கள்

அரசாங்கம் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும், தென்பகுதியில் வன்செயல்கள் பரவலாக இடம் பெற்றன □ பருத்தித்துறை வி. எம். வீதியில் தாக்குதல் ஒன்று நிகழ்ந்ததைத் தொடர்ந்து ஷெல் வீச்சுகள் இடம் பெற்றன. பெரும்பாலான மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர் □ அமைதிப்படை விவகாரதில் இலங்கையின் நிலைப்பாட்டை ஆதரிப்பதாக நேபாளப் பிரதமர் அறிவித்தார் □ காலி நகரத்தில் பஸ்களில் வைக்கப்பட்ட 3 குண்டுகள் வெடித்ததில் 6 பேர் உயிரிழந்தனர் □ ஈழப் பிரகடனத்துக்கு இந்திய அரசின் ஆதரவு தேவை. ஆனல்அவ்வாருன ஆதரவு இருப்பதாகத் தெரியவில்லையென ஈரோஸ் உறுப்பினர் சங்கர் ராஜி பி. பி. ஸிக்குக் கூறினர் □

# திசை

THISAI

## இசைமுகம்

*''சுதந்திர ஒளியினில் மனங்குளி
அதன்வழி திசையெலாம் துலங்கவே''*

### மூன்றும் பார்வை

*''இலங்கை மக்களின் கண்களைப்பெற்று பார்வைபெற்ற வெளிநாட்டினர் எமது நாட்டின் உண்மை நிலையினைக்கண்டு எம்மீது கருணை காட்டி உதவவேண்டும்''*

— ஜனாதிபதி பிரேமதாஸ

கண்கள் இனியன; அவைதரும் பார்வை இனியது.

புறக்காட்சியை நமக்கு அளிக்கும் கண்களைப் போற்றுவோம்.

ஆனால் நமது கண்கள் நமக்குத்தரும் காட்சி எப்போதும் நம்பகமானதா? நடுநிலைக்குரியதா?

எனது பார்வையில் எலியாகத் தெரியும் ஒருபொருள் பிறர் பார்வையில் நரியாகத் தெரியலாம்.

இதனால் எலிக்கட்சியும் நரிக்கட்சியும் உருவாகி நாட்டில் சண்டைகள் மலியலாம்.

பார்வைக் கோளாறு என்பது இதுதான்.

இன்று நமது நாட்டிலும் உலகிலும் மலிந்துள்ள பிரச்சினைகளுக்கெல்லாம் காரணம் இந்தப்பார்வைக் கோளாறே.

அதனால் சதா நமது கணகள் மூலமே பிறரைப் பார்க்கப் பழகிக்கொண்ட நாம், பிறரின் கண்கள் மூலம் பிறரையும் நம்மையும் எப்போதாவது பார்க்க முனைந்திருக்கிறோமா என்ற கேள்வி எழுகிறது.

அதனால்தான் நமது நாட்டு மக்களின் கண்களை பிறதேசத்தவருக்கு வழங்கி, அவை மூலம் நமது பிரச்சினைகளைக் கண்டு, புரிந்துகொள்ளுமாறு அவர்களை இரந்து கேட்கிறார் ஜனாதிபதி பிரேமதாஸ.

ஆனால் இப்படி பிறரை விளங்கிக்கொள்ளும் பார்வையை இன்றைய ஜனாதிபதியும் அவரைப்போன்று அன்று ஆட்சியிலிருந்தவர்களும் கைக்கொள்ள மறுத்ததே இன்றைய இத்தனை விளைவுகளுக்கும் காரணமாய் இருக்கிறது.

தமிழ்ப்பேசும் இனத்தின் பிரச்சினைகளை தமிழ் மக்களின் கண்களூடாகவும் இவர்கள் பார்த்திருந்தால் இன்று ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு பிறரிடம் இரக்க வேண்டிய இந்நிலை ஏற்பட்டிருக்காது.

இன்னும் காலம் கடந்துவிடவில்லை.

இன்று பிரச்சினைக்குட்பட்டிருக்கும் தமிழ்ப்பேசும் இனமும் அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் போராட்டக் குழுக்களும் இதனால் பிரச்சினைப்படும் அரசும் அயல் நாடான இந்தியாவும் பிரச்சினைகளைத் தமக்கூடாகப்பார்க்கும் அதே வேளையில் இதனால் பாதிக்கப்படும் பிறர்க்கூடாகவும் பரஸ்பர பார்வை மாற்றங்கள் செய்வார்களானால் பிரச்சினைகள் சுமுகமாகவே முடிவுற வழி பிறக்கும்.

காரணம், மனமே நமது பார்வையை இயக்குவது. அதனால் தனது பார்வை பிறர்பார்வையோடு கலக்கும்போது, இது மூன்றாவது பார்வையாக நடுநிலை எய்துகிறது.

## கொர்பச்சேவ் பதவியிழக்க சதி?

*பிரபல சோவியத் அரசியல் விமர்சகர் ஈகர் சித்தியாக், கொர்பச்சேவ் பதவியிழப்பது பற்றி கேட்கப்படும் கேள்விகளுக்கு ஆம் என்று பதிலளிக்கிறார்.*

பெரெஸ்ரோய்க்கா அரசியல் சீர்திருத்தம் மற்றும் முற்போக்கு கொள்கைகளை எதிர்ப்பவர்களே இப்படியான சதித்திட்டங்களைத் தீட்டுபவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேற்குலக செய்திகளின் பிரகாரம் பொலிற்பியுரோவில் கொர்பச்சேவுக்கு எதிராகப் பலர் செயல்படுகின்றனர் எனவும் முக்கியமானவராக கோர் லிகச்சேவ் செயல்பட்டு வருகிறார் என்றும் கூறப்படுகிறது.

பொலிற்பியுரோ உறுப்பினர்களிடையே பல கருத்து வேறுபாடுகள் இருந்த போதும் கூட பெரெஸ்ரோய்க்கா எக்காரணம் கொண்டும் ஒதுக்கப்படாது என்றும் சித்தியாக் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பல பகுதிகளுக்கும் விஜயம் செய்த கொர்பச்சேவ் பொது மக்களுடன் நேரடியாகப் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு லெனினது கொள்கைகளை அமுல்படுத்த பிரயத்தனங்களை எடுத்து வருகிறார், என்றும் அவர் எழுதியுள்ளார்.

கொர்பச்சேவினை எதிர்த்துப் போராடக் கூடியவர் யாரும் இல்லை. பொது மக்களின் அபிப்பிராயப்படி கொர்பச்சேவுக்கு அடுத்த இடத்தினை வகிக்கக்கூடியவர் நிகலாய் ரிஷ்கோவ் — சோவியத் பிரதமர்.

இதற்கிடையில் 'மொஸ்கோ நியூஸ்' பத்திரிகைக்குப் பேட்டியளித்த சோவியத் பாதுகாப்பு அமைச்சர் திமீத்ரீயாசேவ், மேற்குலக செய்திகள் ருஷ்யாவில் ஒரு அரசியல் புரட்சி ஏற்படும் எனச் சொல்வதை முற்றாக நிராகரித்துள்ளார்.

## சார்க் மாநாடும் இலங்கையும்

சார்க் மாநாட்டுக்கு இலங்கை சமூகம் அளிக்காதது ராஜதந்திர ரீதியாக ஒரு தவறே என கொழும்பிலிருந்து சண்டே ரைம்ஸ் ஆசிரிய தலையங்கத்தில் கூறியுள்ளது. அதற்கு அது காட்டும் காரணங்களாவன.

இரு நாடுகளுக்கிடையேயான ஒப்பந்தங்கள் பற்றி சார்க் மாநாட்டில் பிரஸ்தாபிக்க முடியாதென்பது இவ்வமைப்மை ஏற்படுத்தியபோதே சகலநாடுகளாலும் ஒப்புக் கொள்ளப்பட்ட விடயமாகும். ஆகவே, சார்க் மாநாட்டில் இதை உத்தியோக ரீதியாக பிரஸ்தாபிக்க முடியாவிட்டாலும் வேறுவழிகளில் செய்திருக்கலாம்.

சமூகமளிக்காததால் நமது நல்ல நண்பர்களை கைவிட்டவர்களாவோம். அத்தோடு சார்க் மாநாட்டால் வரும் நன்மைகளை நீண்டகால நோக்கிலிருந்து அணுகவேண்டும். நாம் இந்தியாவை ஒரேயடியாகப் பகைக்க முடியாது. அது நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் தென்னாசியப் பிராந்தியத்தில் வலுவுள்ளதாகவே உள்ளது. ஆகவே இவற்றை இணக்கமான முறையில் பேசித் தீர்ப்பதே முறை.

## தமிழில் உதைபந்தாட்ட நூல்

தங்கள் சொந்தத் தேவைகளுக்காக நிபுணர்கள் வெளிநாட்டுக்கு ஓடிச் செல்லும் நிலையில் கிழக்கு ஜேர்மனியில் பயிற்சி பெற்ற தம்பிராசா போன்றவர்கள் இங்கிருந்து தமிழில் இவ்வாறான நூலை எழுதியது பாராட்டத் தக்கது.

திரு.டேவிட் தம்பிராசாவின் 'உதைபந்தாட்டம்' நூல் வெளியீட்டு விழாவில் பேசிய டொக்ரர் ஜெயகுலராஜா இவ்வாறு குறிப்பிட்டார்.

யாழ். மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் கே. ஏகாம்பரம் பேசுகையில் கபடி, எல்லே, கிரிக்கட் எனப் பல்வகை விளையாட்டுக்களைப் பற்றிய நூல்கள் சிங்கள மொழியில் உள்ளன. தமிழில் தான் இவை இல்லை. விளையாட்டுக்களில் நாம் 20 – 25 வருடங்களுக்குப் பின்தங்கி நிற்கிறோம் என்றார்.

## தனக்கு மூக்குப்போனாலும்...

அரசுக்கு தற்போது நேர்ந்துள்ள இக்கட்டான நிலையைச் சமாளிக்கவும் ஜே.வி.பி. யினரால் நாட்டுக்கு நேர்ந்துள்ள பேராபத்தைத் தவிர்க்கவும் சகல அரசியல் கட்சிகளின் ஆதரவையும் ஜனாதிபதி பிரேமதாசா கோரியிருந்தது தெரிந்ததே.

இதற்கு அவருக்கு கைமேல் பலன் கிடைத்ததுபோல் சகல எதிர்க்கட்சிகளும் ஐக்கியப்பட்டுள்ளன — அவரை ஆதரிக்கவல்ல, அவரது ஆட்சிக்கு எதிராக நம்பிக்கை இல்லாப் பிரேரணைகள் கொண்டு வருவதற்காக.

தனக்கு மூக்குப் போனாலும் எதிரிக்குச் சகுனப்பிழையாக இருக்கவேண்டும் என்னும் ''அரசியல் மரபில்'' ஊறி வரும் எதிர்க்கட்சிகள் இவ்வாறு நடந்துகொண்டதில் ஆச்சரியமில்லை.

ஆனால் எவர் ஆட்சிக்கு வந்தாலும் ஜே. வி. பி. யினர் இவர்களை அமர விடப்போவதில்லை என்பதை, இவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

## 'புஞ்சி ஆண்டுவ'

இன்று அரசுக்கும் ஜே. வி. பி யினருக்கும் இடையே நடைபெறும் அதிகாரப் போட்டியினால் ஏற்படும் விளைவுகளுக்கு மக்கள் வடிவம் கொடுக்கத் தொடங்கியுள்ளனர்.

அரசாங்கம் ஒரு சட்டத்தை அமுல்படுத்துகிறது.

அதற்கெதிராக ஜே. வி. பி. அச்சட்டங்களை அமுல்படுத்தவிடாது பயமுறுத்தல் செய்கிறது.

இங்கு அரசாங்கமாய் இருப்பது ஜனாதிபதி பிரேமாவின் ஆளுங்கட்சியா? ஜே. வி. பியா?

இரண்டுமே அரசாங்கம் என்றால் முன்னதை அரசாங்கம் என்றும் (ஆண்டுவ) பின்னதை சின்ன அரசாங்கம் (புஞ்சி ஆண்டுவ) என்றும் மக்கள் அழைக்கத் தொடங்கியுள்ளனராம்.

## ரஷ்யாவில் இன மோதல்

150 தேசிய இனங்களைக் கொண்ட சோவியத் யூனியனில் இன உறவுகள் மோசமடைந்து வருவதை சோவியத் நாடாளுமன்றத்தில் நடைபெற்றுவரும் விவாதங்கள் வெளிக்காட்டுகின்றன.

நாடாளுமன்றத்தினுள் இருந்து எழுதும் அரசியல் அவதானிகளான விளாடிமீர் சிமனேவ் ''சூழல் சுற்றாடலுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்துக்களைப் போல், எயிட்ஸ் நோய்போல் இன உறவுகள் பற்றிய பிரச்சினைகளும் நாட்டில் உள்ளன'' எனக் குறிப்பிடுகிறார்.

தேசிய இனங்களின் சபைத் தலைவரான றபீக் நிஷானேவ் பின்வருமாறு கூறினார்: ''இன்றைய உஸ்பெக்கிஸ்தான் நிலவரம் வெடிப்பு ஏற்பட்ட எரிவாயுக் குழாய் போன்றது, ஒரு சிறிய பொறியால் தீப்பிடித்து சர்வநாசம் ஏற்படலாம்''.

## இலங்கை இராணுவத்தை எதிர்நோக்கும் பிரச்சினைகள்

நாட்டில் ஐந்து மாதகால ஓய்வுக்குப் பின் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டு, பத்திரிகைத் தணிக்கையும் அமுலுக்கு வந்திருப்பது தெரிந்ததே.

இவற்றை மீள அமுல்படுத்த அரசாங்கம் விரும்பாதிருந்த போதும் ஜே. வி. பி யினரின் அட்டகாசம் அவர்களை இந்நிலைக்குத் தள்ளியுள்ளதோடு, பயங்கரவாதிகள் என்று சந்தேகிக்கப்படும் யாரையும் சுட்டுத்தள்ளும் சுதந்திரத்தையும் இராணுவத்துக்கு வழங்கச் செய்துள்ளது.

ஆனால் இந்த இராணுவ நடவடிக்கை மூலம் அரசு தனது கையை மேலோங்கச் செய்யுமா என்ற கேள்வி, இன்று அரசியல் வட்டாரங்களில் அடிபடத் தொடங்கியுள்ளது. சந்தேகத்திற்கு ஆதாரமாக அவர்கள் காட்டுபவை யாவன :-

(1) வட - கிழக்குப் பகுதிகளில் கண்களை மூடிக்கொண்டு இலங்கை இராணுவம் சுட்டுத் தள்ளியது போல் தெற்குப் பகுதியில் செய்யுமா? தனது இனத்தைத் தானே அழிப்பது என்பது அதற்கு சிறிது தயக்கத்தைத் தரவே செய்யும்.

(2) இராணுவத்துக்குள் ஜே. வி. பி. யினரின் ஊடுருவல் இருப்பது அடுத்த சிக்கலாகும். இதனால் இராணுவம் எடுக்கும் தாக்குதல் நடவடிக்கைகள் முன்னதாகவே எதிரிகளுக்குத் தெரிய வந்து விடுகிறது.

(3) இராணுவத்தின் மூலம் ஜே,வி.பி. யினர் அழிக்கப்பட்டால், இராணுவத்தில் உள்ளவர்களின் குடும்பங்கள் பூண்டோடு ஜே. வி. பி. யினரால் அழிக்கப்படலாம் என்ற பயம் இராணுவ உயர்மட்டங்களில் நிலவுகிறது. இந்நிலை வட - கிழக்குப் பகுதிகளில் அவர்களுக்கு இருந்ததில்லை.

## சந்திரனில் . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூரல் இம்மாதம் 20ஆம் திகதி கொழும்பில் நடைபெறுகிறது. இதில் பௌதிகத்துறைப் பேராசிரியர் ஒஸ்மன்ட் ஜயரத்தின, அமெரிக்க விண்வெளி ஆய்வுக் கல்லூரியிற் பயின்ற மோகன் குமாரசாமி போன்றோர் கலந்துகொள்கின்றனர்.

## இ. போ. ச . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பள உயர்வு வழங்கப்படுமென்றும், அதன் முழுத்தொகை 3 பகுதிகளாக வழங்கப்படுமென்றும் அதைவிட 1989 ஜனவரியிலிருந்து 180 ரூபா சம்பள உயர்வு வழங்கபபடுமென்றும் தெரிவிக்கப்பட்டது. காலப்போக்கில் இத்தகைய சம்பள உயர்வு ஏனைய அரசுத்துறை ஊழியருக்கும் வழங்கப்படுவது பற்றி ஆலோசிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இப்பத்திரிகை, இல. 118, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள நியூஈரா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தால் 14-7-1989இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது
Registered as a newspaper at the General Post Office, Sri Lanka, Under Q.J. 78/89.